For Private Circulation only

# SELVI KANDARAJ EDUCATIONAL & CHARITABLE TRUST

Regn. No.6611/2007




Founder President Lights Kuthuvilakku

## 10ஆம் ஆண்டு சிறப்பு இதழ்

NEWS LETTER 2018

**Registered Office :**
Plot No.86, ‘A’ Block, Thanikachalam Nagar 3rd Main Road,
1st Cross St., Ponniammanmedu, Chennai - 600 110. India.

**Administrative Office :**
No.9A, 1st Cross Street, Sakthivel Nagar, Peravallur, Chennai-82.
Email : selvicharity@yahoo.com
Facebook : www.facebook/selvicharity

Website : www.selvicharity.org
Contact Mobile Nos : 9444004691, 98405 64778, 9444102547

# PONDY











# NAGARKOIL









# MYLADUDURAI








(For Private Circulation only)

# SELVI KANDARAJ EDUCATIONAL & CHARITABLE TRUST

**Regn. No. 6611/2007**


| Registered Office : Plot No.86, 'A' Block, Thanikachalam Nagar, 3rd Main Road, 1st Cross St., Ponniammanmedu, Chennai - 600 110, India | Administrative Office : No.9A, 1st Cross Street, Sakthivel Nagar, Peravallur, Chennai - 82. |
|---|---|

Email : Selvicharity @yahoo.com
Facebook. www.facebook/selvicharity    Website : www.selvicharity.org
Contact Mob : **98405 64778, 9444102547, 9444004691**



**Advisors :**
Rt. Judge. **K. Mohanachandran**
Shri. **S. Neelakantan**
Shri. **B. Panneerselvam**
Shri **P. Munuswamy**

**Patrons :**
Shri. **J. Venkatesan**
Chief Patron

Shri. **S. Natarajan**
Patron

**Trustees :**

**Shri. K. Krishnakumar**
Founder President

**Shri. G. Sundar**
Founder Secretary

**Shri. V. Chandramohan**
Founder

**Shri. G. Krishnamurthy**
Trustee - Treasurer

**Shri P. Guruprasad**
Trustee

**Shri. G. Velmurugan**
Trustee

**Shri. T. Ganapathy Subramanian**
Trustee

**Shri. M. Arunkumar**
Trustee

**Shri.A. Anandan**
Trustee

**Shri. A. Kamalraj**
Trustee

**PRO.**

**Ms. P.Renugadevi**

# நிறுவன தலைவர் வாழ்த்து மடல்

உங்கள் அனைவரையும் இந்த சுற்றறிக்கை மூலம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பத்து வருட நிறைவின் நிமித்தம் இந்த ஆண்டு சிறப்பு மலராக கொண்டு வர ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

கொடியது கொடியது இளமையில் வறுமை... என்ற வாக்கியத்தின் ஆழத்தை மனதில் நிறுத்தி, அந்த வறுமை நிலையை போக்குவதன் மூலம் சின்னஞ்சிறு குழந்தைகளும், சிறுவர் சிறுமியர்களும் நல்ல தரமான கல்வியைப் பெற்றிட நமது டிரஸ்ட் பாடுபடுகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

ஆயினும், தனிமரம் தோப்பாகாது! ஊர் கூடினால்தான் தேர் இழுக்க முடியும்! என்ற பழமொழிகளுக்கிணங்க இந்த மாபெரும் செயலினை முழுமையாகவும் வெற்றிகரமாகவும் செய்திட நம் அனைவரின் எண்ணமும், ஒத்துழைப்பம், விடாமுயற்சியும் இன்றியமையாதது என்பதை நான் இத்தருணத்தில் உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயன்பெறும் மாணவர்கள் வாழ்வில் வெற்றிச்சிறகடித்து வானில் உயரே பறப்பதைப் பார்க்கும்பொழுது இந்தப் பிறவியில் செய்யத்தக்க ஒரு பெரும் செயலை செய்திட்ட திருப்தியும், மனநிறைவும் அனைவருக்கும் ஏற்படுகிறது.

செயல் சிறிதானாலும் குறிக்கோள் மேன்மையானதாக இருப்பதினால் நமது இந்தக் குறிக்கோள் வெகுவிரைவில் நிறைவேறி நமது மாணவச் செல்வங்கள் பார் போற்றும் பல அரிய நிகழ்வுகளை, சாதனைகளை செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இத்தருணத்தில் இந்தப்புனித பயணத்தில் என்னோடு உறுதுணையாக இருக்கும் அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன். மேலும் மாணவ செல்வங்கள் நன்கு படிப்பதன் மூலம் நமது டிரஸ்ட்க்கும், நாட்டிற்கும் மேலும் இவ்வுலகிற்கும் பெருமைதரும் பல நல்லசெயல்களை செய்ய மனதார வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்,

**கே.கிருஷ்ணகுமார்**

நிறுவனத் தலைவர், செல்வி கந்தராஜ் எஜுகேஷனல் அண்டு சாரிட்டபிள் டிரஸ்ட்

# டிரஸ்ட் உருவான காரணம்

நோக்கம்:

படிக்க ஆர்வமுள்ள, மாணவ மாணவியருக்கு அவரவர் கல்வி பயில தேவையான பொருட்கள் வழங்க வேண்டும் என்கிற முதன்மை நோக்கத்தில் செல்வி கந்தராஜ் ஏஜுகேஷனல் அண்டு சாரிட்டபிள் டிரஸ்ட் 2007-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் துவக்கப்பட்டது. இந்த டிரஸ்ட் ஜாதி, மதம், இனம் மற்றும் அரசியல் பாகுபாடின்றி இந்நாள் வரை செயல்பட்டுவருகிறது. இந்த டிரஸ்ட் 15-க்கும் மேற்பட்ட நிர்வாக குழுவினரால் நடத்தப்பட்டு வருகிறது.

ஆக்கம்:

இந்த நோக்கம் செயலாக்கம் பெற, கடந்த பத்து (10) ஆண்டுகளாக எங்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய நன்கொடையாளர்களுக்கும் இந்நேரத்தில் நன்றிக்கூற கடமைப்பட்டுள்ளோம். மாணவர்களை நேரடியாக கவனித்துக்கொள்ளும் நபரை நாங்கள் Co-ordinators அதாவது ஒருங்கிணைப்பாளர்கள் என அழைக்கின்றோம். எங்களிடம் இதுபோன்ற ஒருங்கிணைப்பாளர்கள் 100 பேர்களுக்கும் மேல் பதிவுசெய்து உள்ளனர். இந்த அளவுக்கு நமது அறக்கட்டளையை செயலாற்ற முடிந்ததிற்கு ஒருங்கிணைப்பாளர்களின் ஒத்துழைப்பும் ஒரு முக்கிய காரணமாகும். அவர்களை நாங்கள் டிரஸ்டின் தூண்களாக கருதுகின்றோம். இவர்கள் அனைவரும் சென்னை, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, புதுச்சேரி, சேலம், ஈரோடு, மற்றும் நாகர்கோவில் போன்ற இடங்களில் சேவை புரிந்து வருகின்றனர்.

**டிரஸ்ட்டின் கடந்த கால சாதனைகள்:**

கல்வி ஆண்டு உதவிபெற்ற மாணவ மாணவியர் எண்ணிக்கை

| வருடம் | எண்ணிக்கை |
|---|---|
| 2008-09 | 117 |
| 2009-10 | 168 |
| 2010-11 | 198 |
| 2011-12 | 173 |
| 2012-13 | 237 |
| 2013-14 | 245 |
| 2014-15 | 197 |
| 2015-16 | 207 |
| 2016-17 | 175 |

கடந்த பத்து ( 10 ) ஆண்டுகளில் மொத்தம் 1700க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் எங்கள் டிரஸ்ட் மூலம் உதவி பெற்றுள்ளனர். சராசரியாக ஆண்டு ஒன்றுகக்கு 170 மாணவர்கள் உதவிபெற்றுள்ளனர். ஒருங்கிணைப்பாளர் களிடமிருந்து பிரதிபலனாக இந்த அறக்கட்டளை ஏதாவது ஒன்றை எதிர்பார்க்குமானால், அது அவர்கள் தங்களது மாணவ மாணவியரது கல்வியில் நல்ல கவனம் செலுத்தி, அவர்களை சிறப்பாக தேர்வில் வெற்றிபெற செய்ய வேண்டும் என்பதே.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

என்று கூறிய திருவள்ளுவர், ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் என்பது, கல்விச் செல்வமே. கல்வி தவிர மற்ற பொருட்செல்வங்கள் எல்லாம் அழியக்கூடியவை, ஆகையால் அவை சிறப்புடைய செல்வம் ஆகா.

ஒருங்கிணைப்பாளர்களும் மாணவ மாணவியர்களை அவரவர் வாழ்க்கையில் நல்ல கல்வி கற்க செய்து, பல வெற்றிகளை பெற்று, அவர்கள் வீட்டுக்கும் நம் நாட்டுக்கும் பல நன்மைகள் செய்ய வாழ்த்துக்களை கூறி எங்கள் சிற்றுறையினை முடித்துக்கொள்கிறோம்.

என்றும் நன்றியுடன்,

**ஜி.கிருஷ்ணமூர்த்தி** — பொருளாளர்

**ஜி.சுந்தர்** — நிறுவன செயலாளர்

செல்வி கந்தராஜ் எஜுகேஷனல் அண்டு சாரிட்டபிள் டிரஸ்ட்

******

## பயனாளிகள் தேர்வும், உதவித்தொகை அளிக்கும் முறைகளும்:

நமது டிரஸ்ட் கல்வி உதவித்தொகை பெறும் மாணவர்களை எப்படி தேர்வு செய்கிறது என்பதையும் அவர்களுக்கான உதவித்தொகையை எப்படி நிர்ணயம் செய்கிறது என்பதையும் இந்தக் கட்டுரையின் மூலமாக அனைவருக்கும் தெரிவிக்க நமது டிரஸ்ட் கடமைப்பட்டுள்ளது.

## பயனாளிகள் தேர்வு :-

முதலாவதாக, மாணவ மாணவியர் அனைவரும் சாதி மத பேதமின்றி, அவர்களது கல்வித்தகுதியின் அடிப்படையிலேயே தேர்வு செய்யப்படுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் நமது **Cut Off Mark**-ஐ செயற்குழு தீர்மானம் செய்யும். 2016-2017க்கான **Cut of mark** 60% ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் அவரவர் கீழ் படிக்கும் மாணவர்களின் முந்தைய வருட **Mark Sheet** உடன் அந்த மாணவ, மாணவியரின் புகைப்படத்தையும் **Scan** செய்து நமது **Website**-ல் பதிவேற்றம் செய்வார்கள். அந்தப் பட்டியலை அந்தந்த ஒருங்கிணைப்பாளர்களின் டிரஸ்டிகள் ஆய்வு செய்து ஒப்புதல் அளிப்பார்கள். கடைசியாக, செயற்குழுவால் தேர்வு செய்யப்படும். “தேர்வாளர்கள் குழு” டிரஸ்டிகள் ஒப்புதல் அளித்த விண்ணப்பப் படிவங்களை சீரிய முறையில் பரிசீலித்து **Final Selection List**-ஐ **Approve** பண்ணுவார்கள்.

## உதவித்தொகை அளிக்கும் முறை:

நமது டிரஸ்ட் மூலம் அளிக்கப்படும் உதவித்தொகை **Slab System** முறையில் கொடுக்கப்படுகிறது. அதாவது 6வது வகுப்பு முதல் 10வது வகுப்பு வரை படிக்கும் மாணவர்க்கு வருடா வருடம் ரூ.1500/-ம் +1, & +2, மாணவர்களுக்கு ரூ.2000/-

ஒவ்வொரு வருடமும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஒருங்கிணைப்பாளர் –களுக்கும் அவர்கள் கீழ் படிக்கும் மாணவர்களின் நிலைக்கேற்ப மொத்த மாணவர்ளுக்கும் உண்டான கல்வி உதவித்தொகை ஒருங்கிணைப்பாளர்கள் பெயரில் காசோலை மூலம் கொடுக்கப்படுகிறது. அதை அவர்கள் **Bank**ல் டெபாசிட் செய்து அந்தந்த மாணவர்களுக்கான உதவித்தொகைக்கு உண்டான படிப்பு சம்பந்தமான பொருட்களை வாங்கிவைத்துவிடுவர்.

ஒவ்வொரு வருடமும், டிரஸ்டின் **Office Bearers** மற்றும் டிரஸ்டிகள், சங்க செயலாளர் தலைமையில் பயனாளிகளின் ஊர்களுக்கு சென்று அங்கு ஓர் கூட்டம் ஏற்பாடு செய்து அவ்விடத்தில் நேரடியாக உதவிப்பொருட்களை பயனாளிகளுக்கு வழங்குகிறார்கள்.

இதன்மூலம் உதவித்தொகை பயனாளிகளை சென்று அடைவதை உறுதி செய்து கொள்கிறார்கள்.

அனைத்து நடவடிக்கைகளும் புகைப்படங்களாக நமது டிரஸ்ட் **website**ல் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சென்று அடைகிறது.

**T. கணபதி சுப்பிரமணியன்**
Trustee - SKECT

# செல்வி கந்தராஜ் கல்வி அறக்கட்டளை

கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு.

இது நாம் எல்லோரும் அறிந்த ஓர் உண்மை. தற்கால விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தில் உலகமே கையளவு ஆகும் நிலையில் கையளவு கல்வியைப் பெற்றால்தான் உலகளவு சாதனைகளையும் நம் கையளவு ஆக்கிக்கொள்ள முடியும்.

பொருட் செல்வத்தை ஒருவர் நமக்கு எளிமையாக கொடுக்க முடியும். நமக்கு அது அதிகம் என்று எண்ணினால் அதை நாமும் பிறருக்கு சுலபமாக கொடுத்து மகிழலாம். எளிமையாக வரும் இந்த பொருட்செல்வம் மிக விரைவில் நம்மைவிட்டு எளிமையாக மறைந்தும் விடலாம்.

இங்கே அழகு என்ற தலைப்பில் நான் வடித்த கவிதை ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன்.

கண்ணுக்கு மை அழகு
பெண்ணுக்கு மென்மை அழகு
கவிதைக்கு கருத்து அழகு
முகத்துக்கு முறுவல் அழகு
உறவுக்கு உரிமை அழகு
உள்ளத்துக்கு அமைதி அழகு
வாழ்வுக்கு துணை அழகு
தாழ்வுக்கு பெருந்தன்மை அழகு
கற்றதில் பெற்றது அழகு
கடவுளின் கருணை அழகு

இங்கே கற்றதில் பெற்றது அழகு என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் கொள்ளலாம்.

கல்வியை பெறுவதினால் திறமைபெற்று நாம் செல்வம் ஈட்டி உலக சுகபோகங்களைப் பெறுவது என்பது ஒரு பொருள்.

மற்றொரு பொருள் கற்றதிலிருந்து நாம் வாழ்நாளில் பெரும் ஞானம் என்னும் உள்ளறிவு என்பது.

இந்த ஞானம் என்பது நமக்குள் என்றும் அழியாத ஒன்று.

இப்படி ஒரு அற்புத அழகை பொருளாக ஞானமாக நாம் பெறுவதற்கு மூலகாரணமான செல்வி கந்தராஜ் கல்வி அறக்கட்டளையை உருவாக்கி அதற்காக அயராது உழைப்பவர்களை மனமார வாழ்த்தி அவர்கள் வழங்கும் அற்புத உதவியை உள்ளன்போடு ஏற்று நமக்குள் கல்வியை வளர்த்து கல்வி மூலம் நம் அகக்கண்களை திறந்து இறை அன்போடு நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைப்போம்.

வாழ்க இவ்வையகம்! வளர்க இத்தொண்டு!!

Mrs.**மதுமிதா** W/o Mr.**S.நீலகண்டன்**
Trust Advisor

*******

# கல்வி உதவி பெறும் வழிமுறைகள்

ஈகையில் திறன்பட விளங்கும் நமது "செல்வி கந்தராஜ் எஜுகேஷனல் அண்டு சாரிட்டபிள் டிரஸ்ட்" பல ஏழை மற்றும் கல்வியில் சிறந்து விளங்கும் மாணவ மாணவிகளுக்கு கல்வி பயில உதவிக்கரம் நீட்டிகொண்டிருக்கின்றது என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

நொடிப் பொழுதுகளில் தகவல்களை பரிமாறிக்கொள்ளும் இந்த தொழில்நுட்ப உலகம், காலதாமதம் கறைந்து, வேலை சுமையும் குறைந்து. அனைவரின் அன்றாட வாழ்விலும் அண்டிக்கொண்டது. நமது டிரஸ்ட்டின் தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒரு பங்காக, இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது. நம் டிரஸ்ட் இணையதள முகவரி www.selvicharity.org ஆகும்.

நமது இணையதள சேவை மூலம், அன்றாடம் நடைபெறும். நமது டிரஸ்டின் நிகழ்வுகளின் புகைப்படங்கள் மற்றும் அதன் விபரங்களை அறிந்துகொள்ளலாம். யாரேனும் நமது டிரஸ்ட்க்கு உதவ நினைத்தால், நன்கொடை கொடுக்க ஏதுவாக, விபரங்கள் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மிக முக்கியமாக, நமது டிரஸ்டின் தூண்கள் என கருதப்படும், ஒருங்கிணைப்பாளர்கள் தாங்கள் மாணவர்களின் மதிப்பெண் பட்டியல் மற்றும் முழு விபரங்களை பதிவு செய்திட எளிய முறைகளை நமது டிரஸ்ட் நிர்வாகம் அமைத்துள்ளது.

ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் இணையதளம் மூலம் தங்கள் மாணவர்களை பதிவு செய்ய ஊக்குவிக்கப்படுகிறது. ஒருங்கிணைப்பாளர்கள் எந்த சிரமமும் இன்றி நமது இணைய சேவையை பயன்படுத்தி, தாங்கள் செய்யவேண்டியவற்றை சுருக்கமாகவும், தெளிவாகவும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தனக்கென ஒரு மின்அஞ்சல் முகவரி கட்டாயமாக வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் அதனை அன்றாடம் பயன்படுத்தி வரவேண்டும். டிரஸ்டிகள் மூலம் உருவாக்கப்படும், ரகசிய எண் (அ) Password ஒருங்கிணைப்பாளர்கள் அனைவருக்கும், தாங்கள் வைத்துள்ள மின்அஞ்சல் முகவரிக்கு வந்துசேரும்.

பின்னர் ஒருங்கிணைப்பாளர்கள் அந்த "Password" ஐ பயன்படுத்தி, நமது www.selvicharity.org எனும் இணைய சேவையை அணுகி, "Login" (அ) உள்நுழை செய்தல் வேண்டும். உள்நுழைந்தபின் தங்கள் முழு விபரங்கள் (புகைப்படத்துடன்) அதில் பதிவு செய்திடல் வேண்டும். தங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை மாற்ற நினைத்தால், எப்போது வேண்டுமானாலும் நீங்கள் மாற்றிக்கொள்ளலாம். அதற்கான அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்பாளர்கள், தங்கள் மாணவர்களின் விபரங்களை எளிய முறையில் பதிவு செய்திடலாம். அதற்கான வழிமுறைகள் இதோ...

ஒருங்கிணப்பாளர்கள் Login (உள்நுழை) செய்தபின், தனது பக்கத்தில் இடதுபுறத்தில் "Student Form"ஐ தேர்வுசெய்ய வேண்டும். விபரங்களை பதிவு செய்யும்முன், தனது மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களையும், புகைப்படத்தையும் (Jpeg (or) jpg) படிவத்தில் தயாராக வைத்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்களின் பெயர், பிறந்த தேதி, பயிலும் ஆண்டு, பயிலும் பள்ளி, பெற்றோர் பெயர், மாத வருமானம், வீட்டுமுகவரி ஆகியவற்றை பதிவு செய்தல் வேண்டும். மேலும் தாங்கள் வைத்துள்ள புகைப்படம் மற்றும் மதிப்பெண் சான்றிதழை தேர்வு செய்து "Submit"ஐ தேர்வு செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

மாணவர்களின் மதிப்பெண்கள் பாடவாரியாக பதிவிடுதல் வேண்டும். மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு தேர்வுகுழுவின் மூலமாக, மாணவர்கள் தங்கள் உதவித்தொகைக்கு தேர்வு செய்யப்படுவார்கள்.

ஒருங்கிணைப்பாளர்கள் தாங்கள் மாணவர்களை பதிவு செய்ய "Submit"ஐ தேர்வு செய்தபின், "Student Registered Successfully" என்ற குறிப்பு வந்துவிட்டால், தங்கள் மாணவர் வெற்றிகரமாக பதிவு செய்யப்பட்டார் என்று கருதலாம். மேலும் மாணவர்களை பதிவு செய்யபட்டார் என்று கருதலாம். மீண்டும் "Student Form" ஐ தேர்வு செய்து, மேற்கூறிய விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

நமது டிரஸ்ட் நிர்வாகத்தின் இந்த சேவை வசதி அனைவருக்கும், முக்கியமாக ஒருங்கிணைப்பாளர்களுக்கு மிகவும் உதவியாக அமைந்துள்ளது. மேலும் நமது டிரஸ்டின் கொள்கை, கோட்பாடுகள், மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி, தொலைபேசி எண் போன்றவைக்கு, நமது இணைய சேவையான www.selvicharity.org என்ற இணைய முகவரியை அணுகவும்.

**M.அருண்குமார்**

Trustee, Selvi Kandaraj Educational & Charitable Trust

# வாழ்த்துச் செய்தி

<u>பத்தாண்டு கல்விப்பணியில் செல்வி கந்தராஜ்</u>

செல்வி கந்தராஜ் கல்வி மேம்பாட்டு உதவி அறக்கட்டளை 2007ஆம் ஆண்டு துவக்கப்பட்டு தொடர்ந்து செயலாற்றிவருகிறது.

கல்வித்தகுதியில் மிகவும் சிறப்பாக மிளிரும் ஏழைக்குழந்தைகள், பொருளாதாரத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தாலும், அவர்களது கல்வித்துவக்க நிலையில் உதவும் நோக்கத்துடன் இந்த அறக்கட்டளை செயல்படுகிறது என்பது மிகவும் பாராட்டுக்குரியது.

இதற்கு சீரிய நோக்கத்தினை எண்ணத்தில் கொண்டு இந்த அறக்கட்டளையை நிறுவி பொருளாதார நலிவில் சிக்கியிருக்கும் இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாய் நிற்கும் நிறுவனர் திரு.கிருஷ்ணகுமார் அவர்களையும், அவர்தம் தந்தையான கல்வியாளர் திரு.கந்தராஜ் அவர்களையும், இந்த அறக்கட்டளையை நேர்மையுடன் நிறுவகித்துவரும் செயலாளர் திரு.சுந்தர் அவர்களையும், இதனைத் திறம்பட நடத்திச் செல்ல உறுதுணையாய் விளங்கிய அறக்கட்டளை உறுப்பினர்களையும் உளமகிழ்ந்து பாராட்டுகிறேன். நல்ல நோக்கத்துடன் செயல்பட்டுவரும் இந்த அறக்கட்டளை, உயர்ந்த உள்ளம் கொண்ட நண்பர்கள் ஆசியுடனும் மற்றும் நல்லெண்ணம் கொண்ட கொடையாளர்கள் ஆதரவுடனும் சிறப்புடன் செயலாற்றி, பத்தாண்டுகள் நிறைவு பெற்று விழா நடத்தும் இவ்வேளையில், செல்வி கந்தராஜ் கல்வி மேம்பாட்டு உதவி அறக்கட்டளை மேலும் வெற்றி நடை பயில எனது உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**B.பன்னீர்செல்வம்,**
Trust - Advisor
(முன்னாள் துணைத்தலைவர்,
அகில இந்திய ரிசர்வ் வங்கி விளையாட்டு & கலாச்சார குழுமம்)
சென்னை

என் பெயர் ஷம்னா.ஜா. நான் ஸ்டெல்லாமாரிஸ் கல்லூரியில் **B.Sc. Maths** படித்துக்கொண்டு இருக்கிறேன். நான் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் படித்தேன். 10ஆம் வகுப்பில் 489/500 மார்க் எடுத்தேன். அப்போது தான் ஆனந்தன் சார் மூலம் **"Selvi Kandaraj Educational & Charitable Trust"** பற்றி கேள்விப்பட்டு அவர் மூலம் அதில் சேர்ந்தேன்.

அந்த டிரஸ்ட் மூலம் எனக்கு 11-12ஆம் வகுப்பில் என் படிப்பிற்காக பண உதவி கிடைத்தது. 12ஆம் வகுப்பில் 1107/1200 மார்க் எடுத்தேன். **B.Sc. Maths** படிக்க விரும்பியதால் ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியில் சேர்ந்தேன்.

மேலும் சுந்தர் சார் எனக்கு ஒரு ஸ்பான்சரை ஏற்பாடு செய்து கொடுத்தார். என் ஸ்பான்சர் பெயர் திரு.கலைவாணன். அவர் ஒவ்வொரு ஆண்டும் என் படிப்பிற்கான உதவியைச் செய்வார்.

பண உதவி பெற்று தருவதோடு மட்டுமல்லாமல் ஆனந்தன் சாரும், சுந்தர் சாரும் தொலைப்பேசி மூலமும், கடிதம் மூலமும் என்னைத் தொடர்புகொண்டு என்னை ஊக்கப்படுத்துவர்.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் என் போன்ற மாணவர்க்கு பணம் கொடுக்கும்போது அங்கு வந்து பேசுபவர்களின் வார்த்தைகள் மிகவும் ஊக்கம் அளிப்பதாக இருக்கும். நான், வருங்காலத்தில் என் போன்ற மாணவர்களுக்குக் கட்டாயம் உதவி செய்வேன்.

********

அனுப்புநர்:

சீ.அபிராம சுந்தரி
18, பெருமாள் கோவில் தெரு,
கூறைநாடு,
மயிலாடுதுறை.

பெறுநர்

உயர்திரு.ஜி.சுந்தர்.
சென்னை செல்வி கந்தராஜ் கல்வி அறக்கட்டளை,
சென்னை-600 110.

மதிப்பிற்குரிய சுந்தர் ஐயா அவர்களுக்கும், நீதியரசர் மோகனசந்திரன் ஐயா அவர்களுக்கும் அபிராம சுந்தரி வணக்கத்துடன் வரையும் மடல்.

என் பெயர் அபிராமசுந்தரி. நான் மயிலாடுதுறையில் வசித்து வருகிறேன்.

நான் செல்வி கந்தராஜ் அறக்கட்டளையில் உதவித்தொகை பெறும் மாணவியாக உள்ளேன். என்னுடைய ஒருங்கிணைப்பாளர் பெயர் அ.விஜயலட்சுமி. அவர்கள் தான் என்னை செல்வி கந்தராஜ் அறக்கட்டளையில் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அதற்காக அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன். நான் இந்த அறக்கட்டளையில் கடந்த 6 வருடங்களாக உதவித்தொகை பெறும் மாணவியாக உள்ளேன்.

நான் 9ஆம் வகுப்பு படிக்கும்போதுதான் இந்த அறக்கட்டளையில் இருந்து உதவித்தொகை வாங்க தொடங்கினேன். அப்போதிலிருந்து இப்போது வரைக்கும் (III Year படிக்கிறேன்) உதவித்தொகை பெற்றுகொண்டிருக்கிறேன். நான் 9, 10ஆம் வகுப்பு படிக்கும்போது ரூ.2000 உதவித்தொகை பெற்றேன். நான் 10ஆம் வகுப்பில் 473 மதிப்பெண் பெற்றேன்.

| | |
|---|---|
| **Tamil** | **- 94** |
| **English** | **- 88** |
| **Maths** | **- 94** |
| **Science** | **- 98** |
| **Social Science** | **- 99** |
| | **473** |

ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு முறை மயிலாடுதுறையில் **Meeting** நடத்துவார்கள். கடந்த 2013ஆம் ஆண்டில் நடைபெற்ற **Meeting**–இல், நான் 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றேன் என்பதால் செல்வி கந்தராஜ் அறக்கட்டளை எனக்கு **Scientific Calculator** மற்றும் அமெரிக்காவில் இருக்கும் கிருஷ்ணகுமார் அவர்களின் **Encourageable** கடிதமும் சுந்தர் ஐயா அவர்கள் தனது கரங்களால் எனக்கு வழங்கினார்கள். அந்த தருணம் மிகவும் சந்தோசமாக இருந்தது.

அதுக்கு அப்புறம் 11, 12ஆம் வகுப்பிலும் ரூ.3000 உதவித்தொகை பெற்றேன். 12ஆம் வகுப்பில் 1153 மதிப்பெண் பெற்றேன்.

| | |
|---|---|
| **Tamil** | **-194** |
| **English** | **-190** |
| **Computer Science** | **- 200** |
| **Economics** | **-172** |
| **Commerce** | **197** |
| **Accountancy** | **- 200** |

9-12வது வகுப்பு வரைக்கும் எனக்கு சுந்தர் ஐயா அவர்கள் தான் உதவித்தொகை வழங்கினார்கள். நான் **College** சேர்ந்தவுடன் சுந்தர் ஐயா அவர்களிடம் சொன்னேன். சுந்தர் ஐயா, நான் 12ஆம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற்றதனால் **College**-ல் மேற்படிப்பு படிப்பதற்காகவும் பணம் உதவி செய்ய முன்வந்தார். **Sundar Sir** அவர்கள் நீதியரசர் மோகனசந்திரன் ஐயா அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்கள். கல்லூரி **First Semester**லிருந்து இப்போது நடைபெற்று கொண்டிருக்கும் 5வது **Semester** வரைக்கும் அவர்கள் கொடுத்த உதவித்தொகை மூலமாகதான் நான் **Fees** கட்டிக்கொண்டிருக்கிறேன் அவர்கள் கொடுத்த உதவித்தொகை தான் நான் **Fees** மற்றும் **College** சென்று வர போக்குவரத்து செலவிற்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

**July** 2015ஆம் ஆண்டில்தான் நீதியரசர் மோகனசந்திரன் ஐயா அவர்களின் 75வது பவளவிழா நடைபெற்றது. அந்த பவள விழாவிற்கு வருமாறு எங்களுக்கு அழைப்பு கடிதம் அனுப்பியிருந்தார். அந்த பவளவிழாவில்தான் எனக்கு அவர் கைகளால் முதன்முதலில் உதவித்தொகை வழங்கினார்கள். அந்த தருணம் மிகவும் மறக்கமுடியாத தருணமாகும். அப்போதிலிருந்து இப்போது வரைக்கும் அவர் மூலமாகதான் நான் **Fees** கட்டிக்கொண்டு வருகிறேன். இந்த உதவி மிகவும் எனக்கு உதவியாக இருக்கிறது. அதற்கு சுந்தர் ஐயா மற்றும் மோகனசந்திரன் ஐயாவிற்கு நன்றி.

விளக்கு எரிவதற்கு எப்படி திரிநூல் மிக அவசியமோ, அதேபோல் விளக்காகிய எனது கல்வி (படிப்பு) ஒளிருவதற்கும் உங்களது உதவி மிக அவசியமாக இருக்கிறது.

கல்வி என்னும் அறிவொளியான விளக்கை என் வாழ்வில் ஏற்றி வைத்து அந்த விளக்கை அணையாமல் காத்துக்கொள்வது போல எனது படிப்பு வளர தொடர்ந்து கல்வி உதவி செய்கிறீர்கள். சுந்தர் ஐயாவிற்கும், மோகனசந்திரன் ஐயாவிற்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி,

மயிலாடுதுறை
19.10.2017

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
**சீ.அபிராமசுந்தரி.**

## பெண் உரிமை – கவிதை

எத்தனை உரிமைகள் ஆணுககு – அதில்
ஏதுமில்லை இங்கு பெண்ணுக்கு
ஆயிரம் வஞ்சனை பெண்ணுக்கு – அது
தெரிவதில்லே நம் கண்ணுக்கு
தொட்டிலிறங்கி தவழ்கையில்
தொடங்குதிந்த கொடுமைகளே
ஆணை பெண்ணை விளையாட்டினிலே
பிரித்து வைப்பார் மடமையிலே
குட்டிச் சிறுமி, மட்டையெடுத்து... ஆடமாட்டாளா?
ஸ்டெபிகிராப் மார்ட்டினா. போல ஆகமாட்டாளா?
ஆடவேணும் பாடவேணும் நிகராய் ஆணும் பெண்ணும்
பிஞ்சு நெஞ்சிலே விதைக்க வேணும் சமத்துவத்தின் எண்ணம்.
நன்றி.
பெயர் : ஈ.தாரணி
வகுப்பு: **V Std**
இடம்: மைக்கேல்பாளையம்

*************

## கவிதை

உன் நினைவுகள் கொண்டேன்
அது நிஜங்கள் ஆகுமோ என்று
கனவுகள் கண்டேன் – அது
தொலைந்து போகுமோ என்று;
உணர்வுகள் கொண்டேன் – அது
ஊமை ஆகுமோ என்று;
உன் நிலவு முகத்தை கண்டேன்
அது தேய்ந்து போகுமோ என்று

– பெயர் : **மா.ஜெரிட்டா**
மைககேல் பாளையம்
ஈரோடு மாவட்டம்
அந்தியூர் – 638 501.

*************

## கவிதை

கன்னி மயில் கண்கள் காந்தம் போல்
ஒட்டி கொள்ள அவள் கூந்தல் மயில்
விரிந்தாடும் தோகையை போல் அழகாக
விரிந்திருக்க அவர் கையில் வளை ஓசை
ஜதிகள் பாட அவள் காலின் கொலுசு
ஒருவித நயனங்கள் தாலாட்டும்.
உண்மையுள் ஒரு சாதி
அன்புள்ள ஒரு மரம்.
அறிவுள்ள ஒரு கனவு
அதை நான் தினமும் நினைக்கு
அதை என் பள்ளிக்கூடம் நியாபகம்
– பெயர் : **ஜோஸ்ப்பின் நிர்மலா**
வகுப்பு : **V**
இடம்: மைக்கேல்பாளையம்

***********

## வெள்ளி நிலா – கவிதை

வெள்ளி நிலா வானத்திலே....
வந்து போகுதடா... அது
வந்து போன பிறகும் அங்கே....
பாதை இல்லையாடா......
பாதை இல்லையாடா.......
தென்றல் வீசும் மாலை பொழுதில்
நிலவு இல்லையடா...... அது.
இரவில் வந்து போனதும் அங்கே.
சுவடு இல்லையடா...
சுவடு இல்லையடா.....
தாய்க்குப் பின்னாலே தாரம் என்பது
உலக நீதியடா...... அந்த
தாரத்தின் சுகத்தில் தாயின் அன்பை
மறந்து போகாதேடா....
மறந்து போகாதேடா.....
– பெயர்: **ஈ.கௌசிக்**
வகுப்பு : **VI -B**
இடம்: மைக்கேல்பாளையம்

## ஆசிரியர் பணி – புதுக்கவிதை

அகரத்தை கற்பிக்கும் பணி
ஆண்டவனுக்கு ஈடான பணி
இல்லாமை போக்கும் பணி
ஈடில்லா ஆசிரியப் பணி
உண்மையை உரைக்கும் பணி
ஊக்கத்தை கொடுக்கும் பணி
எண்ணங்களுக்கு வண்ணம் தரும் பணி
ஏணியாய் இருக்கும் பணி
ஐயங்களை போக்கும் பணி
ஒற்றுமையை வளர்க்கும் பணி
ஓடம்போல் இருக்கும் பணி
ஔவை வழிநடக்கும் பணி
அஃதே ஆசிரியர் பணி

--பெயர்:**ச.லூவிஸ்**
மைக்கேல் பாளையம்,
ஈரோடு மாவட்டம்,
அந்தியூர்.

************************

## பெருமைசார்ந்த இந்தியப் பெண்கள்

முதல் பெண் பிரதமர் – அன்னை இந்திராகாந்தி
முதல் பெண் குடியரசுத்தலைவர் – திருமதி.பிரதீபா பட்டில்
ஆளுநர் (உ.பி.) – சரோஜினி நாயுடு
நீதிபதி – அன்னா சாண்டி
வழக்கறிஞர் – ரெஜினா குஹ
உச்சநீதிமன்ற நீதிபதி – பாத்திமா பீவி
வெளிநாட்டுத் தூதர் – விஜய லெட்சுமி பண்டிட்
விண்வெளிப் பெண்மணி – கல்பனா சால்லா
தொடர் ஓட்டம் – P.T.உஷா
வில்வித்தை – தீபிகா குமாரி
டென்னிஸ் – சனியா மிர்ஷா
மல்யுத்தம் – அனிதா
பளுதூக்குதல் – மல்லேஸ்வரி
குத்துச்சண்டை – மேரிகோம்
பேட்மிண்டன் – சாய்னா

சாதித்த சாதனைப் பெண்களைப்போல் சரித்திரம் படைக்க சபதமெடுப்போம்
மாணவிகளாகிய நாமும். வாழ்த்துக்கள்.

----பெயர்: **S.தர்ஷினி**
மைக்கேல்பாளையம்
ஈரோடு மாவட்டம்
அந்தியூர்.

*************************

## எனக்கு ஆசை – கவிதை

சூரியனில் குளிர்காய ஆசை
நிலவுக்கு வண்ணம் தீட்ட ஆசை
பறவையின் பற்களை பார்க்க ஆசை
பாம்பிற்கு பல்தீட்ட ஆசை
மழைத்துளியை எண்ணிப்பார்க்க ஆசை
மணல் வீட்டில் வாழ்ந்து பார்க்க ஆசை
கருவறைக்கு மீண்டும் செல்ல ஆசை
காற்றை கண்ணால் பார்க்க ஆசை
எறும்பிற்கு செருப்பு போட ஆசை
யானை மடியில் கொஞ்ச ஆசை
கொசுவிற்கு ஆடை அணிய ஆசை
வானத்தை தொட ஆசை
ஏழாம் அறிவுடன் வாழ ஆசை

-------பெயர் : **A.விமலா மேரி**
மைக்கேல் பாளையம்
ஈரோடு மாவட்டம்
அந்தியூர்

**********

## ஆசிரியர்கள் –கவிதை

கல்லாக இருந்த என்னை
சிலையாக வடித்தவளே!
என் முயற்சிக்கு உறுதுணையானவரே
என் சாதனையின் பதிவேடே!
என் வெற்றிக்கு வேர் போன்றவளே
தேடல் என்னும் உலகிலே எனக்கு
தேடாமல் கிடைத்த பொக்கிஷமே!
அறிவு என்னும் பொன்னை

அள்ளி அள்ளித் தருபவரே!
கண்டித்து திருத்தும் என் கண் போன்றவரே!
என்னை நல்வழியில் நடத்துபவரே!
என்னை ஈன்று எடுக்காத
இன்னொரு தாயே!
என் இரவில் நிலவு போன்றவளே
என்னை அன்பால் காப்பவரே!
வலிமை தாங்கிய சிலைபோல
தான் தந்தவழி அனைத்தையும்
தாங்கிய ஒரு பெண்சிலையே
என் அன்பில் என்றும் உங்கள் முகம்தான்
-----பெயர் : **S.லூகிஸ் பாரதி**
மைக்கேல்பாளையம்
ஈரோடு மாவட்டம்
அந்தியூர்.

*************

## முதல் மாணவ மாணவியாக – கவிதை

தன்னோடு பேசத் தெரிந்தவன் ஞானியாவான்
சமுதாயத்தோடு பேசத் தெரிந்தவன் தலைவானாவான்
நம்மோடு பேசுவதற்கு எண்ணங்கள் தேவைப்படுகிறது
பிறரோடு பேசுதற்கு வாய் தேவைப்படுகிறது
எந்த நண்பர்களிடமும் பேசவில்லை என்றால் மன அழுத்தம் ஏற்படும்.
பேசவேண்டிய காரணங்களுக்குப் பேச வேண்டும்
சிரிப்பவர்களுக்கு நண்பர்கள் அதிகம்
நம்ம குடும்ப சூழ்நிலையை நினைத்துப் படிப்பில் மற்றும்
எல்லாத் திறமைகளிலும் முதல் மாணவ மாணவியாக திகழ வேண்டும்.
எந்த ஒரு பாடத்தையும் கதையும் கற்பனையுமாக நினைத்து
படிக்க வேண்டும்.
“கஷ்டப்பட்டு படிப்பதைவிட
இஷ்டப்பட்டு படிப்பது நல்லது”
இதில் உள்ள செய்தியை கடைபிடித்தால் நீங்கள் தான் முதல் மாணவ மாணவியர்.
--------பெயர்: **A.பிரான்சிஸ் சேவியர்**,
மைக்கேல்பாளையம்,
ஈரோடு மாவட்டம்
அந்தியூர்.

****************

## மழை – கவிதை

மேளதாளத்துடன் வானிலிருந்து
வருகுது மழை!
இடி மின்னல் காற்று வீசியும்
நமக்கு மழையை தருகிறது
நமக்கு நன்மையைத்
தருவதும் மழையே!
மரங்களை வளர்ப்போம்!
மழையை பெறுவோம்!
-- பெயர் : **ச.ரோஸ்லின் பெல்சியா**
வகுப்பு : 11–ம் வகுப்பு.

*************

## இன்பம் – கவிதை

கற்றவர்முன் கற்ற கல்வியை
கூறல் இன்பம்.!
வெற்றியை வாழ்வில் சேர்க்கும்
வினைபல புரிதல் இன்பம்!
சிற்றினக் கயவ ரோடு
சேராது வாழ்தல் இன்பம்!
பெற்றதை வழங்கி வாழும்
பெருங்குணம் பெறுதல் இன்பம்!
––––பெயர் : **M.மரிய நல்லம்மாள்**
வகுப்பு : 8ம் வகுப்பு – ஆ பிரிவு

**************

## இன்பம் – கவிதை

பழந்தமிழ் கற்றல் இன்பம்
பலநாடு சுற்றல் இன்பம்
எழுந்திடு புதுமை தன்மை
ஏற்றிடல் வாழ்வுக் கின்பம்.
குழந்தையின் தளிர்க்கை பட்ட
கூழினை உண்ப தின்பம்
இழந்ததைப் பெறுதல் இன்பம்
இசைபட வாழ்தல் இன்பம்!
––––பெயர் : **C.மரிய ஷாலினி**
வகுப்பு : 6ம் வகுப்பு – அ பிரிவு

## முயற்சி – கவிதை

உன்னை உனக்கே அறிமுகமாக்கி
உன் திறமைகளை உலகிற்கு உணர்த்தி,
தோல்வி நிலைதனை மாற்றி
யாவும் அறியும் அறிவுதந்தாய் முயற்சியே!
துன்பத்தை தூரவிரட்டி
சிந்தனையை தெளிவுப்படுத்தி,
முன்னேற்றப் பாதையை உண்டாக்கி
வெற்றிபெற துணைபுரிந்தாய் முயற்சியே!
--------பெயர் : **M.லீமாராணி**
வகுப்பு : **X - B**

*****************************

## இயற்கை – கவிதை

இயற்கை எனும் காற்றிலே!
அதிசயங்கள் தோன்றுவதே!
என்ன ஒரு அதிசயம் ! – நாம்
சுவாசிக்க உதவுவது காற்றே!
அக்காற்றும் ஒரு இயற்கையே!
மரங்கள் அதற்கு உதவும்.
இயற்கையே ஒரு கோவில்!
அவற்றை நாம் போற்றிக்
காக்க வேண்டும்.
-----------பெயர் : **ச.வின்சி**
வகுப்பு : 9ம் வகுப்பு ஆ பிரிவு

***********

## வாழ்வில் வளம்பெற மூன்று – கவிதை

கவனிக்க வேண்டியவை மூன்று: 1. பேச்சு 2. நடத்தை 3.செயல்.
தவிர்க்க வேண்டியவை மூன்று : 1. சோம்பல் 2.பொய் 3.கோபம்
பக்குவபடுத்த மூன்று : 1. தைரியம் 2. திருப்தி 3.மகிழ்ச்சி
அடக்க வேண்டியவை மூன்று: 1. நாக்கு 2.கோபம் 3. சோதனை
வெற்றிக்கு இன்றியமையாதவை மூன்று: 1.தன்னம்பிக்கை 2.பொறுமை 3.விடாமுயற்சி
கடைபிடிக்க வேண்டியவை மூன்று : 1. சத்தியம் 2.நட்பு 3.அன்பு
மகிழ்ச்சியான வாழ்க்கைக்குரியவை மூன்று : 1. சென்றதை மறப்பது

2.நிகழ்காலத்தை நேர்வழியில் செலுத்துவது. 3. வருங்காலத்தை பற்றி சிந்திப்பது.
உயர்ந்த மனிதனின் வாழ்க்கை மூன்று வகையில் இருக்கும்.

1. அவன் ஒழுக்கத்தோடிருப்பதால் கவலையற்று இருப்பான்
2. அவன் அறிவாளியாய் இருப்பதால் குழப்பங்களின்றி இருப்பான்.
2. அவன் துணிவாக இருப்பதால் அச்சமின்றிருப்பான்.

A.Peter Paulraj
Co-ordinator
Michael Palayam
Anthiyuir.

**************

# திருக்குறள் கதை (396) – தொட்டனைத்தூறும் மணற் கேணி

அப்பா! நான் ஸ்கூலுக்கு போகல! உன் கூட வேலைக்கு வரேண்ணு சொன்னபோது முருகேசன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். மகன் குமாரோ மிகவும் பிடிவாதமாய் இருந்தான். ஏதோ நாமதான் படிக்காம போனதுனால கிணறு தூர்வாரும் வேலையில் இருக்கோம் பையனாவது நாலு எழுத்து படிக்கணும்னு நினச்சவருக்கு ஏமாற்றம்தான். என்ன செய்ய? ரொம்ப கண்டிக்கவும் பயம். ஒருவேளை பக்கத்துவீட்டு பையனைப்போல ஓடிப்போயிட்டா?

மகன் குமாரைப் பொருத்தவரை, படிப்பு என்பது சில வருடங்கள்தான் அதன்பின் தேவை இருக்காது என்றுதான் நினைத்திருந்தான் ஆனால் எல்லா ஆசிரியர்களும், தொடர்ந்து படித்துக்கொண்டே இருந்தால்தான் அறிவு வளரும் என்று மீண்டும் மீண்டும் சொன்னபோது இதுவரை படித்ததேபோதும் என்று முடிவெடுத்து விட்டான்.

அந்தக் கிணறு சுமாரான ஆழம்தான். அப்பாவுடன் குமாரும் கூட இறங்கினான். முதலில் கிணற்றில் இருந்த பழைய தண்ணீறை இறைத்துவிட்டார்கள். பிறகு அடியில் இருந்த தூர்ந்து போன மணல், கசடு எல்லாவற்றையும் வெளியே அகற்றிவிட்டு கடைசியாக ஊற்றுக்கண் எல்லாவற்றையும் கூர்மையான மெலிதான கடப்பாறையில் திறந்துவிட்டார்கள். இனி சில வருடங்களுக்கு ஊற்று தொடர்ந்து வரும், தண்ணீர் வற்றாது,

வேலை முடிந்த பின், கொண்டு வந்திருந்த சாப்பாட்டை இரண்டு பேரும சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, குமார் கேட்டான். அப்பா! கிணத்தை எதுக்காக தூர் வாரணும்! முருகேசன் சொன்னார் “கிணத்தை சுத்தி தண்ணி இருக்கும். அது ஊத்துக்கண வழியாதான் கிணத்துக்குள் வரும். தூர்ந்துபோன மணலும், கசடும் தண்ணி வர வழியை அடைச்சுடும் அந்தப் பாதையெல்லாம் திறந்திருந்தால்தான் கிணத்துக்கு தண்ணி வரும் இல்லன்னா தூந்துபோயிரும். புதுத்தண்ணி வேணுன்னா புதுவழிதான் உண்டாக்கணும்.

அவர் மேலும் சொன்னார் “உன் படிப்பும் அப்படித்தாம்பா! ஒரு தடவை படிச்சு முடிச்சிட்டா வாழ்க்கையில் எல்லாமே தெரிஞ்சுக்க முடியாது. புது அறிவு வேணுன்னா புது படிப்புதான் வேணும்னு” சொன்னபோது குமார் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

மறுநாள் காலை, குமார் தன் புத்தகங்களை எடுத்து பையில் வைத்துக்கொண்டிருந்தான் ஸ்கூலுக்கு செல்வதற்காக.

இதைத்தான் திருவள்ளுவர் 396வது குறளில் இப்படி சொல்லியிருக்கிறார்.

தொட்டணைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத் தூறும் அறிவு (396)

பொருள் : மணல் கிணறானது தோண்டத் தோண்டத்தான் ஊற்றெடுக்கும். அதுபோல மீண்டும் மீண்டும் கற்கும்போதுதான் அறிவு வளரும்.

**எம்.மனோகரன்,** Ex.GM/CPCL

பொதுமேலாளர் – பணிநிறைவு

## என் வாழ்க்கை

பலமுறை ஜெயித்தவன் ஒருமுறை
தோற்றால் அது விசித்திரம்,
பலமுறை தோற்றவன் ஒருமுறை
ஜெயித்தால் அது சரித்திரம்.

பெயர் : **M.ஜெரிட்டா**

இடம் : மைக்கேல்பாளையம்

வகுப்பு : IV.

## என் உள்ளம்.

வாடகை இல்லா வீடு
தாயின் கருவறை
கட்டணம் இல்லா கல்வி
தந்தையின் அறிவுரை
அளவே இல்லா சந்தோஷம்
தங்கையின்அன்பு

ஒளி இல்லா நிழல்

மனைவியின் உறவு

வெறுப்பே இல்லா பகை

சகோதரியின் சண்டை

பயமே இல்லா பயணம்

அண்ணாவின் கையில்

கவலையே தெரியாத நாட்கள்

நண்பனுடன் விளையாட்டு

**ஈ.கௌசிக்,** வகுப்பு : VIIB
இடம் : மைக்கேல்பாளையம்

## வேண்டும் வரங்கள்

நினைத்தவுடன் மழை,

இரவு நேர மெல்லிசை,

கள்ளமில்லா சிரிப்பு,

பொய்யில்லா நட்பு

மீண்டும் ஒரு பள்ளிப்பருவம்,

தோள் சாய தோழி,

உயிர் கொடுக்கும் தோழன்

தாய் மடி தூக்கம்

தூக்கத்தில் மரணம்

மரணம் வரை உன் நட்பு....

**ஈ.தாரணி,** வகுப்பு : VI
இடம் : மைக்கேல்பாளையம்

## அதிசயம்

விரும்புவதால் கருவறையில் மீண்டும்

ஒருமுறை இடம் கிடைப்பதில்லை.

வெறுப்பதால் கல்லறையும் நம்மை விட்டுவிட

போவதில்லை – இருக்கும்வரை

மகிழ்ச்சியாக இருப்போம்.

பெயர் : M.**ஜோஸ்ப்பின் நிர்மலா**
இடம் : மைக்கேல்பாளையம்
வகுப்பு : V

## ஆசன பயிற்சியில் ஏற்படும் மிகுந்த ஆற்றல்

மனிதன் உடல் நலத்துடன் நெடிது வாழவே விரும்புகிறான். அந்த நல்வாழ்விற்கான வழிகளும், நெறிகளும் பண்டைகாலம் முதல் நன்கு ஆராயப்பட்டு வந்துள்ளன தமிழகத்தில்...

தேகத்திற்கு வந்த நோய்களைப் போக்கியும், இனி நோய்கள் வராமல் காத்தும் ஒருவருக்கு உகந்த உன்னத உடலை உருவாக்குகிறது.

உள்ளுறுப்புகளையும், வெளியுறுப்புகளையும், தூய்மைப்படுத்தி அது தன் பணிகளை அருமையாகவும், திறமையாகவும் அயராமல் செயல்படுத்தத் தூண்டுகிறது.

சாதாரணமாகச் செயல்படும் ஒருவனுடைய செயலாற்றலை மிகுதிப்படுத்துவதுடன் உடல் நலமும், மனவளமும் பெற்றுவாழ உற்சாகப்படுத்துகிறது.

அன்றாடம் உடலில் உண்டாகும் கழிவுப் பொருட்களை வெகுவிரைவாக வெளிப்படுத்தவும் உடலைக் கசடற்ற முறையில் வைத்துக் காக்கின்ற சக்தியினையும் உடலுக்குத் தருகிறது. அதாவது நரம்புகள், மூளை, நுரையீரல்,

இதயம், ஜீரண உறுப்புகள் போன்ற அவயங்களுக்குத் திறமையுடன் வேலைசெய்கின்ற ஆற்றலை அளிக்கிறது.

நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ்வதற்குத் துணைபுரிகிறது. மனதாலும், செயலாலும், உயர்ந்த வாழ்வு வாழத் தூண்டுகிறது.

இவ்வாறு தேக நலனுடனும், சிறந்த ஆரோக்கியத்துடனும் வாழ, யோகமுறை உடற்பயிற்சி முறைகளில் நிறைந்து காணப்படுகிறது.

நன்றி!<br>
திருமதி. A.பால்தங்கம்,<br>
(ஒருங்கிணைப்பாளர்),<br>
ஆவர விளை, கீழ்குளம், கன்னியாகுமரி மாவட்டம்

## சாம, பேத, தானம் என்றும் மூன்று வாயில்கள்

சமாதானம் ஒன்றே பகைமை இருளை ஓட்டவல்லது. சர்க்கரையை சாப்பிடுவதன் மூலம் பித்தநோயைக் குணப்படுத்த வழி இருக்கும்போது, யாராவது சுரைக்காயைத் தின்பார்களா?

1. நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள் (Ego)

2. அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டேயிருப்பதை விடுங்கள் (Loose Talk)

3. சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் (Tolerance) என்பதை உணருங்கள்

4. எல்லோரிடத்திலும், எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ என்றும் சொல்லிக் கொண்டு இருக்காதீர்கள்.

5. உங்கள் கருத்துகளில் உடும்புப்பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)

6. மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான, சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)

7. புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச்சொற்களைப் பேசவும் நேரமில்லை என்று சொல்லாதீர்கள்.

8. பிரச்சனைகள் ஏற்படும்போது விட்டுக்கொடுங்கள். (Compromise)

9. சமாதானம் பண்ணுவதில் முதலில் அமர்ந்திருங்கள்.

10. பிறருக்கு உதவிசெய்து கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள்.

நன்றி!!

Mrs.S.Jasmin
Co-ordinator

******

அனுப்புநர்:
அ.பர்வீன் பானு,
எண்.138/47, 87வது தெரு, கே.கே.நகர்,
சென்னை – 78.

பெறுநர்:
திரு.ஜி.சுந்தர் அவர்கள்,
நிறுவன செயலாளர்,
செல்வி கந்தராஜ் எஜுகேஷனல் அண்டு சாரிட்டபிள் டிரஸ்ட்,

பொருள்: மதிப்பிற்குரிய திரு.சுந்தர் சார் அவர்களுக்கு வணக்கம்!

நான் (BBA IIIrd Year ) மீனாட்சி கல்லூரியில் படித்துக்கொண்டு இருக்கின்றேன். செல்வி கந்தராஜ் எஜுகேஷனல் டிரஸ்ட் மூலமாக அங்கு எனக்கு நிறைய (Extra Curricular Activities) கற்றும் கொடுத்தார்கள். கல்வியைப் பற்றின அதிக முக்கியத்துவம் எப்போதும் இருக்க வேண்டும் என்பதை நான் இந்த டிரஸ்ட்டின் மூலமாக புரிந்துக்கொண்டேன்...!

எனக்கும் இந்த செல்வி கந்தராஜ் எஜுகேஷனல் சாரிடபிள் டிரஸ்ட் மூலமாக உதவிபுரிந்த திரு.சுந்தர் சார் அவர்களுக்கும் மற்றும் திரு.அருண் சார் அவர்களுக்கும் எந்தன் பணிவார்ந்த நன்றி கூறிக்கொள்கிறேன்.

தேதி : 30.10.2017

இடம்: சென்னை.

இப்படிக்கு,
உங்கள் மாண்புமிகு. மாணவி
**அ.பர்வீன் பானு**

# நமக்குள்ளே

மாணவிகளே! தோழிகளே!....... ஒரு கதை சொல்லலாம் என நினைக்கிறேன். நீங்களும் கூட இதை எங்காவது யாரிடமாவது கேட்டிருக்கவோ! படித்திருக்கவோ கூடும்.

வகுப்பறையில் நுழைந்த அந்த பேராசிரியர், பெரிய கண்ணாடி ஜாடியை மேஜைமேல் வைத்து, கிரிக்கெட் பந்துகளால் நிரப்பிவிட்டு "ஜாடி நிரம்பி இருக்கிறதா" என்று கேட்டார். "ஆம்" என்றனர், மாணவர்கள், அடுத்ததாக, சிறு சிறு கோலிகளை அதிலேயே அவர் கொட்ட, பந்துகளில் நடுவில் கிடைத்த இடைவெளியில் அழகாக உட்கார்ந்தன கோலிகள். "இப்பேது ஜாடி நிரம்பி இருக்கிறதா" என்றார். "ஆம்" என்று தலை அசைத்தனர். நிறைய மணலை அள்ளி, ஜாடியில் கொட்டிக்குலுக்கிய பேராசிரியர், மாணவர்களை ஏறிட்டார். "இப்போது மொத்தமாக நிறைந்து விட்டது" என்றனர். ஒட்டுமொத்தமாகக் குரலில்! சிரித்துக்கொண்டே..... இரண்டு கோப்பை தண்ணீரை எடுத்து ஜாடியில் ஊற்றினர் பேராசிரியர் அது மணலுடன் கலந்து நிறைந்தது. மாணவர்கள் சிரித்தனர்.

"இந்த ஜாடி, உங்கள் வாழ்க்கையைக் குறிப்பிடுவதாக நினைத்துக் கொள்ளுங்கள். கிரிக்கெட் பந்துகள்... குடும்பம், குழந்தைகள், ஆரோக்கியம், நண்பர்கள் என வாழ்க்கையின் முக்கியமானவற்றைக் குறிப்பதாகக் கொள்ளுங்கள். எதை இழந்தாலும் இவையெல்லாம் உங்களுடன் இருப்பவை. வாழ்க்கை நிறைவாக இருக்க உதவுபவை இந்த கோலிகள். சொந்த வீடு, கார் என்று அடுத்த இடத்தை பிடிப்பவை என்று வைத்துக்கொள்ளுங்கள்; மணல் மற்ற சின்னச் சின்ன விஷயங்கள்!"

சிறிது சிந்தியுங்கள்... முதலில் மணலைக் கொட்டியிருந்தால் என்னவாகியிருக்கும். பந்துகளுக்கோ... கோலிகளுக்கோ... இடமிருக்காது. நம் வாழ்க்கையும் அதே போலத்தான உங்களிடம் இருக்கும் நேரம் முழுவதையும் சின்னச் சின்ன விஷயங்களில் செலவிட்டால், பெரிய விஷயங்களுக்கு நேரம் இருக்காது.இப்படித் திட்டமிட்டு நேரத்தைச் செலவு செய்தால் கிடைக்கும் நமக்கான மகிழ்ச்சியான நேரம்தான்... **தண்ணீர்**.

பேராசிரியரின் விளக்கம் மாணவர்களுக்கு புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சியது!

ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் கிடைத்தாலும் பத்தவே மாட்டேங்குதே... என்று கூற நினைக்கும் மாணவிகளே! தோழிகளே! இந்த கதையைப் படித்த பின்னர் நேரத்தை முறையாக பின்பற்ற பழகிக்கொண்டால் நமது வாழ்விலும் புது வெளிச்சம் (மகிழ்ச்சி) பாய்ச்சும் என்பதில் சந்தேகமில்லை என்பதை உணர்ந்தேன் நான்.

**சோபியா மோனிஷா,** (Co ordinator) சென்னை

# தமிழ் கட்டுரை – கல்வி

பா.மாரிசங்கரி
இளம் வணிகவியல்
முதலாம் ஆண்டு, திருச்சி

ஒருவனை உயர்த்தும் உயர்ந்த கருவி “கல்வி”

# தமிழ் கட்டுரை – கல்வி

.

குறிப்புச் சட்டம்:

✧ முன்னுரை

✧ கல்வியின் முக்கியத்துவம்

✧ கல்வியின் சிறப்பு

✧ அழியாத சிறந்த செல்வம் கல்வி

✧ கல்வி கற்றவர்க்கு சிறப்பு

✧ முடிவுரை

✧ <u>முன்னுரை</u>

இன்றும் என்றும் அவசியமான சிறப்பான தலைசிறந்த கருவியாகவும் நம் அனைவருடைய வாழ்விற்கும் கல்வி ஒரு சிறந்த உணர்வு கருவியாக அமைந்துள்ளது. நம் முன்னேற்றம் கல்வியையே ஆதார அடிப்படையாகக் கொண்டுள்ளது. இறைவன் பல சிறப்புகளையும், களஞ்சியங்களையும் விசித்திரமான விஷயங்களையும் நமக்கு கொடுத்தபோதிலும், கல்வி என்னும் மிகத் தலையாய கருவியாக நமக்கு கொடுத்துள்ளார். அக்கல்வி நமக்கு எந்தெந்த ஆதாரங்களில் இடம்பெற்றுள்ளது என்பதை நாம் காண்போம்.

✧ <u>கல்வி இடம்பெற்றுள்ள ஆதாரங்கள்:</u>

புலவர்க்கு புலமையும், அறிஞர்களுக்கு அறிவுத் திறமையும், பேச்சாளர்களுக்கு நாவன்மையும், எழுத்தாளருக்கு எழுத்துவன்மையும், ஆராய்ச்சியாளர்க்கு அவர்களுக்கு எட்டிய புது அறிவும், விவசாய விஞ்ஞான அறிவு, பொறியாளர், மருத்துவம், காவல்துறை, நீதித்துறை, அரசுத்துறை என இன்னும் பல அறிய துறைகளில் கல்வி இடம்பெற்றுள்ளது.

✧ <u>கல்வியின் முக்கியத்துவம்:</u>

கற்க கசடற கற்பவை கற்றப்பின்

நிற்க அதற்குத் தக.

என்ற வள்ளுவரின் கூற்றுப்படி குற்றங்கள் நீங்குவதற்காகப் பல நூல்களைக் கற்க வேண்டும். கற்றப்பின் அதற்கேற்றவாறு அதன்வழி நடக்கவேண்டும்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லா தவர்.

கண்ணுடையர்கள் என்று சொல்லத்தகுந்தவர்கள் அனைத்தையும் கற்றறிந்த சான்றோர் ஆவார். கல்லாதவர்களுக்கு முகத்திலிருக்கும் இரு கண்களும் புண்களுக்கு சமமாகவும். ஒரு மனிதனுக்கு கை, கால்கள் எவ்வளவு முக்கியமோ, கண் எவ்வளவு முக்கியமோ அதைவிட "கல்வி" மிக முக்கியத்துவமானது.

✧ <u>கல்வியின் சிறப்பு:</u>

கல்வி என்பது ஒரு மனிதனுக்கு அவசியம். வருங்காலத்தில் நல்ல மருத்துவராகவோ, காவல்துறை அதிகாரியாகவோ அல்லது நல்ல சிறந்த குடிமகனாக வருவதற்கு துணைபுரிவது கல்வி. ஒருவன் ஒரு பிறவியில் கற்கும் கல்வி இனிவரக்கூடிய ஏழு பிறவிகளுக்கும் பயனளிக்கும். உன் வகுப்பில் எத்தனை மாணவர்கள் என்றால் கூறிவிடலாம். ஆனால் கல்வியின் சிறப்பை எவ்வளவு என்றால் கூறமுடியாது.

கல்வி என்பது

சொற்களில் வாழ்வதில்லை

கல்வியைச் சொற்களால்

விளக்கவும் முடியாது;

செயல்களில் விளக்கம்

பெறுவது தான் கல்வி.

✧ <u>அழியாத சிறந்த செல்வம் கல்வி:</u>

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடல்ல மற்ற யவை.

அழிவில்லாத சிறப்புடைய செல்வம் கல்வியாகும். ஏனைய செல்வங்கள்

இருந்தாலும் அவை அனைத்தும் செல்வங்கள் ஆகமாட்டா. கல்வி உடையவனே சிறந்த செல்வம். அதாவது கல்விச் செல்வத்தை அவனுடனே வைத்திருப்பான். கல்விச் செல்வத்தை பிறருக்கு கொடுக்க கொடுக்க குறையாது. அழியாதது, என்றும் நிலையானது. ஆனால் பொருட் செல்வத்தை பிறருக்குக் கொடுக்க கொடுக்கக் குறையும். பொருட்செல்வம் அழிந்துபோகக்கூடியது, என்றும் நிலையானதல்ல. (உ.ம்) பல ஆண்டுகளுக்கு முன் "ஐதாரபாத்திலும்" "வாணியம்பாடியிலும்" நேர்ந்த வெள்ளப்பெருக்கினால் மாடமாளிகைகளும், மிகப்பெரிய கோபுரங்களும், அழிந்துபோயின. மிகப்பெரிய செல்வந்தர்களும் உண்ண உணவின்றி, உடுத்த உடையுமின்றி தத்தளித்தனர். அவர்கள் செல்வங்கள் அனைத்தும் அழிந்துபோயின. இதனால் கல்வி நீரினால் மூழ்காது, செந்தழினால் வேகாது, கல்வியை பிறர்க்குச் சொல்ல சொல்ல அழிவில்லாமல் பெருகும். ஆகவே கல்வியே அழியாத சிறந்த செல்வமாகும்.

✧ <u>கல்வி கற்றவர்க்கு சிறப்பு:</u>

மன்னர், கல்வி கற்றவர் ஆகிய இருவரும் ஒப்பிடுகையில் மன்னருக்கு தன்நாடும், தன் நாட்டு மக்களும் சிறப்பு செய்வர். ஆனால் கல்வி கற்றவர்க்கு அவர் எங்கு சென்றாலும் சிறப்பு செய்வர்.

கல்வி கற்றவர்க்கு சென்ற

இடமெல்லாம் சிறப்பு.

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்

சாத்துணையுங் கல்லாத வாறு.

எவ்வளவு படித்தாலும் நல்லது. எத்தனை மொழிகளை கற்றாலும் நல்லது. கல்வி கற்றவர்க்கு எந்த நாடும் சொந்த நாடாகும். எந்த ஊரும் சொந்த ஊராகும்.

மனிதனுக்கு வேண்டும் பொறுமை
அந்த பொறுமையால் வரும் முயற்சி
முயற்சியால் வரும் நம்பிக்கை
நம்பிக்கையால் ஏற்படும் வெற்றி
அந்த வெற்றி ஆகும் சாதனை
பயன்படுத்துங்கள் கல்வியை!

✧ <u>முடிவுரை:</u>

கல்வி என்பது ஒரு மனிதனுக்கு மிக முக்கியம். கல்விதான் இந்த உலகில் நிரந்தரம். கல்வியறிவு இல்லாத எந்தவொரு மனிதனுக்கும் மதிப்பு இல்லை. உடலும், உயிரும் மனிதனுக்கு எவ்வளவு முக்கியமோ அதேபோல கல்வி மிகமுக்கியம். “எண்ணும் எழுத்தும் கண்” எனத் தகும். என்பதற்கேற்ப மனிதன் நல்லறிவு அடைவதற்கு வழிகாட்டும் கல்வி இரு கண்களை போன்றது.

வானத்துக்கு எல்லை இல்லை

கடலுக்கு எல்லைஇல்லை

அதுபோல கல்விக்கு முடிவு இல்லை

“கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே”

என்பதற்கேற்ப அனைவரும் கல்வி கற்க வேண்டும்.

## சந்தோஷம்

நாம் எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இறைவன் நம்மை படைத்தார். நாம் அனைவருக்கும் வாழ்க்கையில் சந்தோஷம் என்பது வேண்டும். நாம் ஆசைப்படுவது எல்லாம் கிடைக்கிறது கிடையாது. எதிர்பார்க்கிறது எல்லாம் நடக்கிறதும் கிடையாது.

சந்தோஷம் என்பது நாம் இருக்கும் இடத்தில்தான் இருக்கிறது. எப்போதும் மனதை சந்தோஷமாக வைத்துக்கொள்ள வேண்டும். சில பிரச்சினைகளை அடியோடு நீக்க முடியாது. அந்த பிரச்சினைகளை Adjust பண்ணிக்கொள்ள, பழகிக்கொள்ள வேண்டும்.

கட்டுப்பாட்டை மீறி போகும்போதுதான் கஷ்டம் வருகிறது.

மனசாட்சியை மீறி போகும்போதுதான் பிரச்சனை வருகிறது.

வாழ்க்கையில் குறை இல்லாதவர்கள் யாரும் இல்லை. எவ்வளவு இனிமையான தருணங்கள் உங்களிடம் உண்டு! நம்மை நாம் மதிப்பதைபோல மற்றவர்களையும் மதித்துநடக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

யாரையும் இழித்து பேசக்கூடாது

பிரித்து பார்க்கவும் கூடாது

எப்படி பேச வேண்டும்

எப்படி பேசக்கூடாது.

என்ற முறை தெரிந்துகொள்ள வேண்டும்.

தலைவாழை இலைபோட்டு, தரையில் உட்கார்ந்து சாப்பிடும் வீடுகள் முதல், Five Star Hotel Range–யில் சாப்பிடும் வீடுகள் வரை வசதிகள் மாறுபட்டாலும் மனது என்பது எல்லோருக்கும் ஒன்றுதான். மற்றவர்கள் மனதை கஷ்டப்படுத்த கூடாது. கோபமான திறமைகள் அனைத்தையும் வீட்டில் அரங்கேற்றி விடக்கூடாது. உங்களுடைய உணர்வுகளை, கருத்துக்களை எண்ணங்களை சரியான வார்த்தைகளால், முறையான முக அசைவுகளால் வெளிப்படுத்துங்கள்.

சந்தோஷம், சந்தோஷம் வாழ்க்கையின் பாதி பலம்! சந்தோஷம் இல்லையென்றால் மனிதர்க்கு ஏது பலம்?

நாம் நினைத்த மாதிரி, வாழ்க்கை நமக்கு கிடைக்கவில்லை என்றாலும், கிடைத்த இந்த நல்ல வாழ்க்கையை அதற்கேற்றபடி மாற்றிக்கொண்டு சந்தோஷமாய் இருப்போம்.

## FUN WITH NUMBERS

**12345679 x 9 = 111111111**

**12345679 x 18 = 222222222**

**12345679 x 27 = 333333333**

**12345679 x 36 = 444444444**

**12345679 x 45 = 555555555**

**12345679 x 54 = 666666666**

**12345679 x 63 = 777777777**

**12345679 x 72 = 888888888**

**12345679 x 81 = 999999999**

By - **C.Govardhini**
Ex-Trustee
Co-ordinator
chennai

## அகிலத்தை ஆளும்; ஆறறிவு மனிதன்

மொழியைக் கொண்டு

முன்னேறிச் சென்று

அறிவைக் கண்டு

அகிலத்தை ஆண்டு

விண்வெளிச் சென்று

வியப்பைக் கண்டு

இயல், இசை, நாடகமென்று

இதனை மூலப்பாங்காய் கொண்டு

வாழ்க்கை என்பது ஒன்று

அதற்கு அர்த்தம் நன்றாய் கண்டு

இலக்கைத் தேடிச் சென்று

இறுதியில் கூட்டாய் வென்று

இவை; அனைத்தையும் செய்த மனிதன்.

இவனே இப்புவிக்கெல்லாம் தலைவன்.

## மனிதன்

காடும் நாடும் நம் வீடு!

இதைக்காக்கும் வழியை நீ தேடு!

கல்வியைப் பற்றி புகழ்ந்துப் பாடு!

தோல்விக்கண்டு விரைந்து ஓடு!

வெற்றியின் பாதையை நீ தேடு!

தீய எண்ணத்தை விட்டுவிடு!

வாழ்வில் தினமும் போராடு!

மகிழ்ச்சியோடு தினமும் விளையாடு!

## ஏன்?

செந்தமிழ் நாட்டினிலே....

செழிப்புமிக்க ஊரினிலே...

வறட்சி வந்த காரணம் ஏன்?

வனங்கள் அழியக் காரணம் ஏன்?

விவசாய நிலத்தினிலே வீட்டைக் கட்டி வைத்தது ஏன்?

கூராய் விஞ்ஞானம் வளர்ந்தது ஏன்?

எதிர்கால வாழ்க்கைக்கான எந்திரமயமானது ஏன்?

எல்லையை மீறியது ஏன்?

## கவிதை

புவி இயல்பாக சுழல்கிறது.

அதேபோல் மனிதனும் சுழல்கிறான்; இயல்பாக அல்ல.

இன்பத்திற்காக!

இப்படிக்கு,

பணிவுடன்

**செ.செல்வி, த/பெ. செல்வம்**, IX-வகுப்பு “அ” C/o. M.Arunkumar - Trustee

****

**Miss. A.N. Abisha, M.B.B.S.,**

**Nagarcoil - Student**

என் பெயர் அபிஷா நான் M.B.B.S., II Year படித்து வருகிறேன். செல்வி கந்தராஜ் எஜுகேஷனல் & சாரிட்டபிள் டிரஸ்ட் எனது கல்விக்கு மிகவும் உதவியாக துணைநின்றது. நான் School படிக்கும் போதே எனக்கு இந்த டிரஸ்ட் Miss Sumathy அவர்களால் அறிமுகமானது. அடிக்கடி என் வீட்டிற்கு வந்து சந்திப்பதும், Call செய்து பேசுவதும் என எப்போதும் Contact–லயே இருப்பார்கள். நான் படிக்க முடியவில்லை, வழியில்லை என்று இருந்த போது, எனக்கு பக்கத்தில் இருந்து

எனக்கு கைக்கொடுத்து என்னை M.B.B.S., என்ற உயர்கல்வியில் இப்பொழுது படிக்க வைத்துக் கொண்டிருப்பதில் Selvi Kandaraj & Educational Charitable Trust–க்கு பெரிய பங்கு உண்டு. ஒவ்வொருக்கு வருடமும் எல்லோரும் ஒரு Meeting–க்கு சந்தித்து பேச வைப்பார்கள். அப்பொழுது தான் தெரியும் ஒவ்வொருவரும் எந்த Background–ல இருந்து வந்திருக்கிறார்கள் என்று எனக்கு முதலில் டிரஸ்ட் School படித்து முடிக்கும்வரை Help பண்ணுவதாக சொல்லியிருந்தார்கள். பின்பு M.B.B.S., Seat கிடைத்தபிறகு. Mr. Mahesh அவர்கள் என்னை தேர்ந்தெடுத்து அவர் மூலம் நான் இப்பொழுது College–ல் எந்தவிதமான Financial Problem–மும் இல்லாமல் படித்துவருகிறேன். College–ல் எல்லாரும் எப்படி இருக்கிறார்களோ என்னையும் அவர்கள் மாதிரியே இருக்க வைத்தார்கள். மிகவும் கஷ்டமான சூழ்நிலை இருக்கும் நேரத்தில் கூட மிகவும் உவியாய் இருந்தார்கள். எல்லாரிடமும் நன்றாய் பேசினார்கள். எங்களையும் பேச வைத்தார்கள். Mr. Sundar Sir அடிக்கடி Call செய்து மிகவும் அன்பாக பேசுவார். நான் நினைத்து பார்க்காத இடத்தில் கடவுள் என்னை வைத்திருக்கிறார். எனக்கு ஏதோ ஒரு purpose வைத்திருப்பார் ஆண்டவர். அவர் கிருபையின் படியே நானும் இந்த டிரஸ்ட்–உடன் இணைந்து அவர் கிரியையை வெளிப்படுத்தவேண்டும். எனக்கு இந்த Selvi Kandaraj Educational & Charitable Trust செய்த உதவி மிகவும் பெரியது. அதற்காகவே நான் நன்றாக படித்து நல்ல மருத்துவராக வேண்டும். என்னை இவர்கள் படிக்க வைத்ததுபோல நானும்ஏழைப் பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும். பல பேர் வாழ்வில் கல்வி என்னும் அணையா விளக்கை ஏற்றி எங்கள் வாழ்க்கைக்கு அர்த்தத்தை சொல்லிக் கொடுத்த டிரஸ்ட்க்கும், அதில் பணிபுரியும் ஒவ்வொரு Co-ordinators & Mr.Sundar Sir எல்லாரையும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன். நான் இதுவரை காணாத எனக்கு எங்கேயோ இருந்து கொண்டு எனக்கு மாபெரும் உதவியை செய்த Mr.Mahesh Sir அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இனியும் இந்த டிரஸ்ட் ஆண்டவரின் கிருபையால் மேன்மேலும் வளர வேண்டிக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

*****

## தாய்

குழந்தையின் முதல் சத்தத்தை கேட்பவள் – நீ

ஒரு உயிருக்கே சொந்தமானவளும் – நீ

அன்பு என்னும் அமுதத்தை தருபவள் – நீ

நிலாவையே பிடித்துத்தரும் திறனுடையவள் – நீ

கருவை வயிற்றில் சுமக்கும் மென்மையானவள் – நீ
அழுதால் கண்ணீரை துடைக்கும் ஆற்றல் வாய்ந்தவள் – நீ
பசித்தால் எனக்கு சோறு ஊட்டுபவள் – நீ
என் துன்பத்தை இன்பமாக்கும் தோழி – நீ
ஆராரோ என்று தாலாட்டும் இசையுடையவள் – நீ
கண் முன்னே தெய்வமாய் திகழ்பவள் – நீ
அன்புடன்
**ச.வர்ஷா** X Std.
D/o, Mrs. S.Parvathi, Chennai - Co-ordinator

*****

**IN THE BEACH...**

Morning in the beach
The sunbeam, birds flutter in the air,
With the chirping sounds,
The rustling of the trees,
With the sound of waves,
Squirrels in the Cliff,
Feels Blissful.
We can meet a bunch of kids,
That We'll be glad to know,
And When we breath fresh air,
The birds sing and whistle loud,
These creatures play and act,
Fills my heart with peace and harmony.

**S.Varsha,**
X-Std., Chennai
D/o, Mrs. S.Parvathi,
Chennai-Co-ordinator

# ஆரோக்கியமாக வாழ

இன்றைய இயந்திரமயமான வாழ்வில் நம்மில் பலரும் உடல்நலனை அடகுவைத்து பணம் சம்பாதிக்கப் பறந்து பறந்து வேலை செய்கிறோம். பிறகு சம்பாதித்ததில் பாதியை உடல்நலனை மீட்டெடுக்க முயல்கிறோம். இதற்குக் காரணம் பரபரப்பான வாழ்க்கை முறைகளும், மாறிவரும் தகாத உணவுப்பழக்கங்களும், தூக்கமின்மை மற்றும் உடற்பயிற்சியின்மையே ஆகும். இதனால் நோய்கள் மட்டுமின்றி, பலவிதமான உடல் உபாதைகளும் வலிகளும் ஏற்படுகின்றன.

இவற்றிலிருந்து விடுபட நம்மால் இயலும். நல்ல உணவுப் பழக்க வழக்கங்கள், சரியான உடல் உழைப்பு மற்றும் உடற்பயிற்சியுடன் உடன் மனவளம் & மனநலம் பேணுதல் போன்ற பழக்கங்களே நம்மை அடிக்கடி மருத்துவனைக்குச் செல்வதைத் தவிர்க்க உபாயங்களாகும்.

இங்கு கூறப்பட்டுள்ள அனைத்து வழிகளையும் நாம் அனைவருமே தெரிந்து வைத்திருப்போம் ஆனால் அதன் பயன்கள் முற்றிலுமாக அறிந்திருக்க மாட்டீர்கள். எனவேதான் அதனைப் பலபேரால் பின்பற்ற முடியாமல் போகின்றன. எனவே மேற்கூறிய பழக்கவழக்கங்களை கையாண்டு நமது தற்போதைய வாழ்வியல் நடைமுறைகளை மாற்றியமைத்தாலே நம்மால் பல வியாதிகளையும், Life Style disorders என்ற (BP, Sugar, Obesity) பிரச்சினைகளையும் வராமல் தடுக்கவும், வந்தபின் கட்டுக்குள் வைக்கவும் உதவும்.

<u>நல்ல உணவுப் பழக்கம்</u>

சரிவிகித சமச்சீரான உணவு என்பது மாவுச்சத்து புரதம், கொழுப்பு வைட்டமின்கள் மற்றும் நார்ச்சத்துக்கள் நிறைந்த உணவுகளாகும். இவையனைத்தும் இயற்கையாக, சமைக்காமல் அப்படியே உண்ணக்கூடிய காய்கறிகள் அதிகம் உண்டு. உதாரணமாக அனைத்துப் பழவகைகளிலும், காய்கறிகளிலும், கொட்டை வகைகள் மற்றும் உலர்பழங்களிலும் உள்ளன. கீரை வகைளையும், காய்கறிகளையும் அதிக நேரம் கொதிக்கவைத்து உண்ணக்கூடாது அதனால் அதன் சத்துக்கள் அனைத்தும் முற்றிலும் அழிந்துபோகும்.

காலையில் வெறும்வயிற்றில் உலர்பழங்கள் முக்கியமாக 5 முதல் 10 பாதாம், திராட்சை 10-15, பேரிட்சை மற்றும் அக்ரூட் 1-2 எடுத்துக்கொள்ளலாம். 2 டம்பளர் வெதுவெதுப்பான நீர் (அ) க்ரீன் டீ பருகி 1 1/2 மணி நேரம் கழித்து நமது அன்றாட காலை உணவினை எடுத்துக்கொள்ளலாம். காலை உணவினைத் தவிர்க்கக்கூடாது.

பழையசாதம் 1 பச்சை மிளகாயுடன் சிறிய வெங்காயம் 4-5 சேர்த்து உண்டால் அதனால் ஏற்படும் பலன்கள் பற்பல. இரத்தசோகை, அல்சர் மற்றும் வயிறு சம்மந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் இது நல்ல தீர்வாக இருக்கும். அடுத்து சிறந்த காலை உணவு பழக்கலவை எந்தெந்த பழங்கள் கிடைக்கின்றனவோ, பிடிக்குமோ அனைத்தும் சேர்ந்த கலவை ஒரு பெரிய கப் எடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொரு வேளை உணவு உண்ட பின் உடனே தண்ணீர் அருந்துவதோ (அ) படுத்து உறங்குவதோ இரண்டுமே தவறானவையே.

மதிய உணவிற்கு சிறிதளவு அரிசி சாதம், கீரை, காய் மற்றும் 1 Cup தயிர் எடுத்துக்கொள்ளலாம். மாலை சிற்றுண்டிக்கு அவித்த வேர்க்கடலை மற்றும் சுண்டல் வகைகள் உண்ணலாம். இரவு உணவினை படுக்கும் 2 மணி நேரத்திற்கு முன்பு எடுத்துக்கொள்ள வேண்டும்.

உணவே மருந்து இதனை சரியான முறையில் உண்டு பயன்பெறலாம்.

<u>உடல் உழைப்பும் ஓய்வும்:</u>

ஒரு நாளைக்கு 8-10 மணி நேரம் கடினமாக உழைக்கலாம். உட்கார்ந்து செய்யும் வேலையெனில் அவ்வப்போது எழுந்து நடப்பது, சிறுநீர் அறைகள் செல்வது, கால்களை உயர்த்தி பாதங்களை சுற்றுவது போன்ற செயல்களைச் செய்யலாம். சில இல்லத்தரசிகள் காலை முழுவதும் வேலையாக இருந்துவிட்டு காலை உணவையும் தவிர்த்துவிட்டு மதியம் சேர்த்து உண்டுவிட்டு மதியம் உறங்கிவிடுவது அதனால் கண்டிப்பாக உடல் எடை கூடும். அதோடு உடல் உழைப்புக்கேற்ற உணவு வகைகளை அளவோடு எடுத்துக்கொள்ள வேண்டும்.

அளவுக்கு அதிகமான உழைப்பும் தவறுதான் அளவுக்கு அதிகமான ஓய்வும் தவறுதான். 6 முதல் 8 மணி நேர உறக்கம் என்பது அவசியமான ஒன்றாகும்.

தற்போதைய வாழ்க்கை முறையில் 12 மணி இரவில் சாப்பிடுவதும் 2 மணிக்கு தூங்குவதும் காலை 11 மணிக்கு விழிப்பதும்கூட இயற்கைக்கு முரணாக விஷயங்கள் ஆகும். இதனால்கூட உடல்பருமான் ரத்தசோகை வியாதி, இரத்த அழுத்தம் உள்ளிட்ட பிரச்சனைகள் வரும்.

காலை சூரிய உதயத்திற்குமுன் விழிப்பது, இரவில் 10.00 மணிக்கு முன் படுக்கைக்கு செல்வது, அளவான ஆரோக்கிய உணவு, உடல் உழைப்பு, உடற்பயிற்சி, மனதுக்கு இதம் தரும் பாடல்கேட்பது போன்ற பொழுதுபோக்கு அம்சங்களுக்கு நேரம் ஒதுக்குவது போன்ற உத்திகளைக்கொண்டு நாமும் நோயின்றி நலமுடன் வாழலாம்.

இவை அனைத்திற்கும் மேலாக மனநலம் காக்கவேண்டிய அவசியத்திற்கு நம் எல்லோரும் தள்ளப்பட்டுள்ளோம்.

அதற்கு முதலில் செய்யவேண்டியது செல்போன் போன்ற காலத்தை விரயமாக்கும் விஷயங்களுக்கு அதிக நேரம் செலவிடுவதைத் தவிர்க்க வேண்டும். குடும்பத்திற்கான பெரியவர் சிறியவர் முதல் அனைவரும் உட்கார்ந்து ஒருவேளையாவது ஒன்றாக உணவருந்தும் பழக்கம் கொண்டுவரவேண்டும்.

பெரியவர் சிறியவர் சேர்ந்து விளையாடவும் நல்ல ஆரோக்கியமான விஷயங்களை விவாதிக்கலாம். தியானம் செய்யலாம்.

Dr.V.ஜெயந்தி வேல்முருகன், பிசியோதெரபிஸ்ட்

## கொடுத்துச் சிவந்த கரங்கள்

ஏழை மாணவன் வாழ்வு நலம்பெற
ஏற்றமுடன் ஒளிதந்து வாழ்ந்திடவே
சேவையுடன் செல்வி கந்தராஜு, **K.Krishna Kumar**
செல்வச் செழிப்புடன் தொண்டு செய்திடவே
ஏழைகள் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டு
ஏணிகளாய் உதவி செய்யும் உள்ளம் படைத்தீர்!
ஒரு நாள் இரவு என் முன்னால்
ஒளியாய் உருவம் ஒன்று வந்தது
கண்ணைக் கசக்கிப் பார்த்தேன் – அது
கனிவாய் என்னிடம் ஒன்று சொன்னது;
“கொடுத்து மகிழக் கற்றுக் கொண்டால்
கோடி புண்ணியம் என்றது” – மேலும்
“நமக்கு இரண்டு கைகள் உண்டு
அவை எதற்கு?” என்று கேட்டது
மௌனம் கொண்டு நான் இருக்க;
மெல்ல... அதுவே இப்படிச் சொன்னது,
“இல்லாதவருக்கு எடுத்துக் கொடுத்து ஏற்றிவிட
இரண்டு உதவும் கரங்கள்” என்றது
தனக்கென வாழாமல்
பிறருக்கென வாழுதல் உதவும் கரங்களாம்!
காக்கை வாழ்வைக் கண்டு நாம்

கூடி வாழக் கற்கலாம்;
கர்ணன் வாழ்வை கண்டு நாம்
கொடுத்து வாழப் பழகலாம்
இல்லாருக்கு கொடுத்தலே வாழ்வு ஆகுமாம்!
இன்முகத்தோடு கொடுக்க உதவும்
இனிமையாக செயலாற்றும் சுந்தரின்
வாழ்வு வளமைபெற வாழ்த்துகிறேன்.

என் அன்புடன்
உங்கள் ஒருங்கிணைப்பாளர்
க.மூர்த்தி, அரசு உயர்நிலைப்பள்ளி
வெண்ணைம்பட்டி, செலவடை
ஓமலூர்(Tk) சேலம்(Dt)

## இளமையே விழித்தெழு

## கல்வியின் உயர்வு!

வானிடை உலாவரும்
வான் சூரியனும் வெளிவந்தால்
மேதினியில் நிலவுகின்ற காரிருள் மறைவதுபோல்
நம்மிடை புகுந்துள்ள அந்தகாரமதை விலக்கி
ஞானமதை ஏற்றுக்கொள்ள வேண்டும்!

நாட்டிடை நிலவுகின்ற
நச்சு கருத்துகளை
ஓட்டிடவே எழுந்திடு தோழா!
ஏட்டிடைப் பிடிப்பினை நெஞ்சில் புகுத்தி
மேட்டைப் போல் உயர்ந்திடு தோழா!
வா தோழா! எழுந்து வா!
பட்டித் தொட்டிகளில் எல்லாம்
படிப்பறிவை புகுத்திடவே!

கந்தையோடு நீ இருந்தால் அதிலெண்ண
கவலை? – கந்தையா அவசியம்! – கூர்
சிந்தையல்லாவா? – நீ

சிந்தையிலே கந்தை வைக்காமல்
கவிழ்க்கும் கொடும் பகையினை
கவிழ்க்க புறப்படு!

குத்துகின்ற குறைகளெல்லாம் – மொத்தமாக
களைந்தெறிய கல்வி வேண்டும்!
நித்தம் பாடும் பாடுகளும்
நிவிர்த்தியாக கல்வி வேண்டும்!
சுத்தமோடு இருந்திடவும் – வாழ்க்கை
சுகமாக வாழ்ந்திடவும்
தத்தம் வழியில் நிறைய
தகவல்களை அறிந்திடவும்!
நித்தம் வேண்டும்! – இந்த
கல்வி வேண்டும்!

சாலச் சிறந்த சான்றோர்களையும்
ஞாலம் போற்றும் ஆன்றோரையும்
காலமெல்லாம் மதித்திட வேண்டும்!
தாய் தந்தை ஆசானையும்
ஆய்ந்தறியா தெய்வத்தையும் மதித்தொழுகிட வேண்டும்!

மதிப்புக்கு மதிப்புக் கொடுத்து அதை
மற்றவனுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும்!
இதற்கு கல்வி வேண்டும்!
பயிலும் கடமை வேண்டும்!

வீசுகின்ற இளந்தென்றலாலும்
வையகத்தில் அழிந்திடுமே தவிர
பேசுதற்கும் எழுதுதற்கும்
படிப்பதற்கும் பாடுவதற்கும்
நாசம் விளைவிக்கும் மனிதனையும்
நன்றியுடன் நடத்துதற்கும்
நாசிவாழ் உலகிலே – என்றும்
நலமோடு வாழ்வதற்கும் கல்வி வேண்டும்!
தேசத்தை தேவலோக மாக்குவதற்கும்
தமிழ் தேன் கல்வி வேண்டும்!

குறட்டைவிட்டு உறங்கிடும்
கும்பகர்ணனைப் போன்று – உள்ள
குடிலில் உறங்கிடும் சாதனை மேயனை
கல்வியால் எழுப்ப வேண்டும்!
கடமைகளை வைத்து சென்ற
“கலைஞர்”களின் வழி நடக்க வேண்டும்!
கலையறிந்தவன் மட்டும் கலைஞன் அல்லன்! – நீதிக்காக
கனன்றெழுந்தவனும் கலைஞன் நான்!

கங்கனம் நிறைந்த – செல்வ
கஞ்சத்தைக் கள்வருக்கு
இங்ஙனம் தான் வாழவேண்டும்!
என்று வழிகாட்டவும்;
தங்க சுடர் கல்வியினை கல்லாதவன்
தனியொரு ஆள்கூட இருக்கக்கூடாது என்பதை

சிங்கமென சீறி எழுந்து
சிறப்பாக வாழ்ந்திடவும் – நம்மவருக்கு
சிங்காரத்தமிழ் கல்வியை
அறிமுகப் படுத்திடுவோம்!

தூங்கி வாழும் வாழ்விதனை
தரித்திரமாய் எண்ணி ஒழித்து
ஓங்கச் செய்ய வேண்டும்
ஒளிதரும் கல்வியிலே! – நம்மை
தாங்கி நடத்தும் கல்வியினை
தரமாய் கற்றிட வேண்டும்!
தயங்கி என்றும் இருந்திடாமல்
துணிவிலே வீரனாகி
பாங்குடன் வாழ்வதற்கு
பயின்றிடுவோம் கல்வியினை!

குடிசைகள் கோபுரமாக வேண்டும்!
அடிச்சுவடுகள் எங்கும் பரவ வேண்டும்!
மண்டியுள்ள கைம்பெண்ணாள் கொடுமைகளும்
நொண்டி சாக்குகளும், மனம் கெடுக்கும்
வேண்டாத கட்டுக் கதைகளும்

ஏண்டா நமக்கு? – நண்பா
கண்டவைகளை விட்டுவிடு
கண்டுகொள் நல்வழியை!

திக்கெட்டும் நம் பாரதம் புகழ்பெற
தக்கதொரு முடிவெடுத்து புறப்படு!

**A.Kamalraj** - Trustee

## கல்வி

கல்வி என்னும் மூன்றெழுத்தே;
உன் கனவே நனவாக்கிடும் முதலெழுத்து!
செல்வத்துள் சிறந்தது கல்வியின்றோ;
உன் வாழ்வை மாற்றிடும் செல்வமன்றோ!
நீ சேமிக்கும் சொத்துக்கள் அழிந்தாலும்;
நீ சேமித்த கல்வியோ அழிந்துவிடா!

உலகம் உனக்கு எந்த புகழாரம் சூட்டினாலும்;
உன் கல்விக்கு ஈடாகாது உணர்ந்திடு!
நீபெற்ற கல்வியை உன் வாயால் காத்திடு;
வானுலகமே உன்னை தூக்கிவிடும்!
நீ பெற்ற கல்வியை உன் மனதால் மதித்திடு;
இந்த உலகமே உன்னை மதித்து விடும்!

உன் கல்விக்கு தகுந்தபடி வாழ்ந்துவிடு;
உன் பெயரெங்கும் மின்னி ஒளி வீசிடும்!
பெற்ற கல்வியை பயன்படுத்திவிடு
பிறர் முன்னேற நீ துணையாகிவிடு!
கல்வியை வியாபாரமாக்கி விடாதே!
உன்னையே நீ மறந்து விடாதே!

பலர்வாழ உன்கரம் ஓங்கட்டும்;
கல்வியெனும் பொன்மொழி வளரட்டும்!
பெற்ற கல்வியை மண்ணில் புதைத்துவிடாதே;
பலகோடி கல்வி புதிர்களை முளைக்க வைத்துவிடு!
கல்வியை மதுவால் அழித்துவிடாதே;

உன் மதியை புற்றாக மாற்றிவிடாதே!
காத்திடு உன் கல்வியை என்றும் நீ;
வளர்த்திடு கல்வியை இவ்வுலகினில்!
பேணுவோம் கல்வியை! வளர்ப்போம் அறிவை.

**Mr.M.Rajan**
**Resource Centre, Kadayal**

## முக்கிய தினங்கள்

தேசிய இளைஞர் தினம் – ஜனவரி 12
இராணுவ தினம் – ஜனவரி 15
குடியரசு தினம் – ஜனவரி 26
தேசிய அறிவியல் தினம் – பிப்ரவரி 28
சர்வதேச பெண்கள் தினம் – மார்ச் 8
உலக ஊனமுற்றோர் தினம் – மார்ச் 15
உலக வனதினம் – மார்ச் 21
உலக ஆரோக்கிய தினம் – ஏப்ரல் 7
பூமி தினம் – ஏப்ரல் 22
தொழிலாளர் தினம் – மே 1
பத்திரிகை சுதந்திர தினம் – மே 3
தாய்தினம் – மே மாதம் 2வது ஞாயிற்றுக்கிழமை
உலக செஞ்சிலுவை தினம் – மே 8
சர்வதேச குடும்பதினம் – மே 15
உலக தகவல் தொடர்பு தினம் – மே 17
காமன்வெல்த் தினம் – மே 24
புகையிலை எதிர்ப்புதினம் – மே 31
உலக சுற்றுச்சூழல் தினம் – ஜூன் 5
உலக மக்கள் தொகை தினம் – ஜூலை 11
வெள்ளையனே வெளியேறு தினம் – ஆகஸ்டு 9
சுதந்திர தினம் – ஆகஸ்டு 15
தேசிய விளையாட்டு தினம் – ஆகஸ்டு 29
ஆசிரியர் தினம் – செப்டம்பர் 5

**C.R. Anu Stephy, Std : XII**

## இயற்கை

பூமித்தாயின் சாபம்
சாபம் பலிக்கும்
தருணம் இது....

தென்றலில் கூத்தாடும் என்னை
புயலில் இடைவளைக்கும் என்னை
ஊஞ்சலுக்கு கை தந்த என்னை
தொலைத்துவிட்டாய்
அழித்துவிட்டாய்

தூசுகளை நான் வாங்கி
உயிர்மூச்சை தந்தேன்
வெயிலில் நான் இணைந்து
நீ ஒதுங்க
நிழல் தந்தேன்......
மழையில் நான் நனைந்தேன்
சல்லடை இலைபந்தலாய்
உனக்கு குடையானேன்

இருப்பினும் நீ
தானம் தந்தாயா?
ஒரு துளி நீர் இறங்கியது வானம்
மழை தந்தது
மகிழ்ந்தாய் நீ – மறந்தாய்
என் ஏக்கத்தை
மனிதா!
நீ என்னை மிதித்து
பயணித்த தருணங்கள் மறந்தாயா?
நீ பிறந்தவுடன்
மடியேந்தினாள் உன் தாய்
நீ இறந்த பின்னும்
நானல்லவா உன்னை சுமப்பேன்

மலைச்சரிவில் என்னை காத்த
நண்பனை நீ அழித்தாய்

விளைவோ நிலச்சரிவு
அழிவும் உன் மதி
மயக்கமே மானிடா!!!

நிலத்தில் குழல் போட்டு
உன் உதிரத்தை
உறிஞ்சினாய்.....
என்னில்.
ஆழியின் நஞ்சை
ஊடுருவச் செய்தாய்.........

என்னை பார்த்தது
கண்ணீர் விட்டது
ஆகாய மேகம் நீயோ
மனம் குளிர்ந்தாய்
நானோ
உடல் குளிர்ந்தேன்
ஆசை தலைக்கேறிய
மானிடா
நிழலுக்கு ஒதுங்கிய
பகல் வேளையில்
உன்னை மெல்ல வருடி
தூக்கத்தை வரம்தந்த
என்னையே
உனக்கு எமனாக்கினாய்

இலைகளுடன் உறவாடி
பூக்களுடன் கைகோர்த்து
பனிகளுடன் நட்பு செய்து
மொட்டுகளை மெல்ல
தட்டியெழுப்பி – உன்
நுரையீரலை புனித மாக்கியவன் நான்

இன்று ஆலையில் புகையும்
பிளாஸ்டிக் புகையும்
வாகனப் புகையும்
என்னோடு சங்கமம் – பாதிப்போ

உன் உடலுக்குத்தானடா
மதி கெட்டவனே.

காற்றில் கார்பன்–டை–ஆக்ஸைடு
உன் மூச்சில் நஞ்சு
கலந்தது நீ தானடா
சூட்டில் தவிப்பதும்
நீயே கல் நெஞ்சனே
தவறுகள் இணைந்து
தரணியில் புலம்பும் மனிதா!!!

உன் ஆராய்ச்சி
பசிபோக்க
வாயைப் பிளந்தாய்
உலக வளத்தை
உருக்குலைத்துவிட்டு
உன்
உடல்பிணிபோக்க
அலைகிறாய்...

மரங்கள் நிறைந்த
சோலையில் தென்றல்
என்னை
இதமாய் அழைத்து
ஊஞ்சல் கட்டி மகிழ்ந்தது
ஓடையில் சலசலப்போடு
பயணித்தேன்....

பூமி உன் தாகம் போக்க
பூமியின் தாகம்
நான் போக்கிறேன்
இதை நீ மறந்தாய்

இயற்கையை நீ அழித்தாய்
காலநிலை மாற
நீயே காரணமானாய்
அதை மறந்து

ஏங்குகிறாய் இன்று
காலநிலை மாறியது
உன் சுய நலத்தால்
நான் வரும்போது
போர் வீரன் போல்
கையில்
பட்டாகத்தியோடு வருகிறேன்

அருவிகளில் நீரை
ஆடையாக உடுத்தி
உன்னை ஆடையின்றி
தவிக்கவிட்டேன்
காரணம்
நீ தானடா மானிடா
எல்லாம் சாபம்
பூமித்தாயின் கோபம் – காரணமே
மனித இனம்....

**T.**ஹைஜின்
வணிகவியல் இளங்கலை
இறுதியாண்டு
Thettikushi
17.11.2017

## மனிதனாக வாழ வழிகள்

மிகவும் மதிப்புக்குரியவர்கள் – தாய், தந்தை
மிகமிக நல்ல நாள் – இன்று
மிகப் பெரிய வெகுமதி – மன்னிப்பு
மிகவும் வேண்டியது – பணிவு
மிகவும் வேண்டாதது – வெறுப்பு
மிகப்பெரிய தேவை – நம்பிக்கை
மிகக் கொடிய நோய் – பேராசை
மிகவும் சுலபமானது – குற்றம் காணல்
தரமற்ற குணம் – பொறாமை
நம்பக்கூடாதது – வதந்தி

ஆபத்தை விளைவிப்பது – அதிக பேச்சு
செய்யக்கூடாதது – நம்பிக்கைத் துரோகம்
செய்யக்கூடியது – உதவி
விலக்க வேண்டியது – சோம்பேறித்தனம்
உயர்வுக்கு வழி – உழைப்பு
நழுவவிடக்கூடாதது – வாய்ப்பு
பிரியக்கூடாதது – நட்பு
மறக்கக்கூடாதது – நன்றி
ஒவ்வொரு நிமிடமும் இருக்க வேண்டியது – இறைபயம்

**T.Anusha Rani**
**Kaattavilai, Kadayal, Kaliyal**

## சுற்றுப்புறச்சூழல்

அழகான சமூகம் நம்முடையது;
இயற்கை நமது வாழ்வின் கண் போன்றது;
கண்கெட்டால் உலகமே இருண்டு விடும்;
இயற்கை அழிந்தால் உலகமே அழிந்துவிடும்
பசுமையை காப்பதே அவசர கடமை
பசுமை விடியல் தினம் ஒருமரம்!
சுற்றுச்சூழலை பாதுகாப்போம்!
நலமாய் வாழ்வோம்!

**T.Anusha Rani**
**Kaattavilai, Kadayal, Kaliyal**

# ESSAY

## Women

Woman is the magnificent creation of God, the emboidiment of love and affection and the incarnation of chastity and charity. She is a multifaceted personality with the power of adjustability, benevolance and tolerance. As the companion of men, she is also gifted with equal mental faculty. But she is not given equal status in the society. Unless and until women are uplifted and granted equal status with men in all walks of life, no nation can develop.

Women are discriminated and marginalized at every level of society. Patriarchy continues to be embedded in the social system; considered women as the object of sex. In India, society is marred by atrocities against women including domestic violence, rape, female infanticide etc., and hence emancipation of woman has become the essential need of the hour.

Empowering women means enabling them to exercise their full control over material assets, intellectual resources and even over their ideologies. In India, the process of empowerment has already begun. As a result, there is a steady improvement in the enrollment of women into the educational institutions. They entered into jobs in increasing numbers. Their health is better compared to earlier decades. They started showing their skills even on the non-traditional sectors like media, police, defence, administration etc. The reservation of women in political sector is a significant step forward. Nevertheless, we still have a long way to go.

Education, determination and courage helps women to break the shackles of socio-cultural taboos. According to Jawaharlal Nehru, educating boy menas educating an individual and educating girl means educating whole village. “There are two ways of spreading light.... To be the candle, or the mirror that reflects it.” Women should choose between being a candle or a mirror, and work for their own emancipation as well as for the generations to come.

**Sivapriya.** M.R., B.A. Economics.

## Nature

Heaven’s wide arch was glorious
With the sun’s returning march.
The river’s flow was darkened
And woods were brightened.
I head the distant waters dash,
I saw the current whirl and flash.
Through the gray mist,
I saw the shattered lance.
A soft gale went forth
to kiss the sun-clad vales.
I watch the blue lake’s beach,

But the woods were bending to it.
The Music of the village bell,
Came sweetly to the echo-giving hills.
Lilly's sweet fragrance,
Made a wonderful world.
If you are tired and,
with sorrows that you,
want to forget with smile,
undoubtfully go back,
with a mischevious smile,
God will take care of you.

By,
**Sivapriya M.R.,**
B.A. Economics,

*****

## கல்வி

செல்வத்தில் சிறந்தது கல்வி!
அதை சிறப்பாய் வளர்ப்பது பள்ளி!
கல்வி என்பது தேன்கூடு!
அதைப்படிப்பது என்றால் பெரும்பாடு!
நாளும் படித்தால் கைகூடும்!
அது நல்லவர் இடத்தில் உறவாடும்!
வாழ்வில் உயர்ந்திட படித்திடுவோம்!
வாகை சூடி வாழ்ந்திடுவோம்!

**R.Sundarabai**
Resource Centre

*****

## கவிதை

## செடிகள்

பூக்களாய் இருக்க
ஆசைப்படாதீர்கள்
மறுநாளே உதிர்ந்து விடுவீர்கள்....
செடிகளாய் இருக்க
ஆசைப்படுங்கள்
தினமும் பூத்துக்கொண்டேயிருக்கலாம்...

## நட்பு

சிரிக்க வைப்பது நட்பல்ல
சித்திக்க வைப்பது நட்பு!
விசிலடிப்பது நட்பல்ல
விந்தைகள் புரிய வைப்பது நட்பு!
ஊர் சுற்றுவது நட்பல்ல
உறங்கிய திறனை எழுப்புவது நட்பு!
நாகரீகமாய் இருப்பது நட்பல்ல
நம்பகமாய் இருப்பது நட்பு!
கலகலப்பாய் திரிவது நட்பல்ல
காலூன்றி அடித்தனம் அமைவதே நட்பு!

## தாய்

வண்ணத்துப் பூச்சியைக் கண்டேன் வண்ணம் தெரிந்தது
பூக்களைக் கண்டேன் வாசம் தெரிந்தது
சூரியனைக் கண்டேன் வெளிச்சம் தெரிந்தது
நிலவினைக் கண்டேன் ஒளி தெரிந்தது
தாயே! உன்னைக் கண்டேன் தியாகம் தெரிந்தது.

## நம்பிக்கை

பூக்கள் உதிர்வது
மறுபடியும் பூப்பதற்காக!
அலைகள் கரையை முத்தமிடுவது
மீண்டும் எழுவதற்காக!
கதிரவன் அந்தியில் சாய்வது
வைகறையில் விடியலுக்காக!
முயற்சி என்பது
முயன்றவரை உயர்வதற்காக!
தோல்வியின் தொடுதலே
வெற்றியின் வெளிச்சம்!
காலம் செல்வதோ “Fast”
அதைச் செய்யாமலிருப்பதோ “Waste”
என்ன செய்யலாம் “Next”
என்று யோசிப்பதே “Best”

## இலக்கு

மதங்கள் பல உண்டு;
ஆனால் அது கூறும் நீதி ஒன்றே – இறைவன்
மலர்கள் பல பூக்கலாம்;
ஆனால் அது பேசும்மொழி ஒன்றே – நம்பிக்கை
பள்ளிக்கூடங்கள் பல உருவாகலாம்;
அது கற்பிக்கும் பாடம் ஒன்றே – ஒழுக்கம்
மொழி பல இருக்கலாம்.
ஆனால் அது கொடுக்கும் புலமை ஒன்றே – தன் உணர்வை வெளிப்படுத்த.
தோல்விகள் பல நம் இதயம் காணலாம்;
ஆனால் அது தரும் முயற்சி ஒன்றே – இலக்கு

## வாழ்க்கை

சிரிக்க வேண்டும் எப்போதும்,
அடி வேண்டும் யாரும் பார்க்காதபோது
நேசிக்க வேண்டும் எதையும் எதிர்பார்க்காமல்,
மன்னிக்க வேண்டும் திருந்தும் போது.

## நேசி

இயற்கையை நேசி
இதயம் சுத்தமாகும்!
உன்னை நேசி
உண்மைகள் புரியும்!
கல்வியை நேசி
நல்லறிவு பிறக்கும்!
நிலவை நேசி
நினைவுகள் இனிக்கும்!
பரிதியை நேசி
விடியல் கிடைக்கும்!
நாட்டை நேசி
நலமே கிடைக்கும்!

## அன்பு

உண்மையான அன்பிற்கு
ஏமாற்றத்தெரியாது,
ஏமாற மட்டுமே தெரியும்....

பெயர் : **V.**லோகேஸ்வரி
வகுப்பு : **VIII "B"**

## பெண்ணே! உன் தடைகளை மீறி....

(தடையை உடைக்கும் படையை உருவாக்கிய கல்வி உரிமை)

பெண்ணே! உன் தடைகளை மீறி
கண்ணே! புதுக்காவியம் சமைத்திடுக
மண்ணே! என் தாய்நாட்டு மண்ணே!
பண்ணே இசைத்திடுக

## புரட்சிப் பெண்ணை நீ வாழ்த்திடுக

பெண்ணே மனிதனின் உயர்ந்த ஊக்கங்கள்
எல்லாவற்றிற்கும் விளக்கு – "ஜேம்ஸ் எல்லீஸ்"
ஒரு நாட்டில் பெண்கள் எவ்வளவு தூரம் முன்னேற்றம்
அடைத்திருக்கிறார்களோ! அவ்வளவு தூரமே.
அந்நாடு முன்னேறும் – "ஜவஹர்லால் நேரு"
காற்றை விட கடுவேகம் கொண்டது
பெண்ணின் எண்ணம் – "ஷேக் ஸ்பியர்"
பெண்ணுரிமை இல்லாத நாடு
காற்றில்லாத வீடு – "லெனின்"

## இவை பெண்ணியத்தின் பெருமை பேசும் மிகச்சிறந்த கோட்பாடுகள்

ஆதிகாலம் தொட்டு பெண்
அடிமை பட்டுத்தான் போனாள்
மீதிகாலமும் இப்படியே சென்றால்
மண்ணுலகில் முன்னேற்றமேது?

படிக்கத் தடை, பார்க்கத்தடை
உடுக்கத் தடை, கொடுக்கத் தடை
அறியத் தடை, கொண்ட ஆவல் தடை
தெரியத் தடை, புது தேடல் தடை.
தெருவாசம் தடை, தேச தூரம் தடை
கருத்து சொல்லத்தடை – அதை
மறுத்துக் கூறத் தடை
எண்ணம் தடை, வண்ணம் தடை
சமத்துவம் தடை, சர்வமும் தடை...
அப்பப்பா! எத்தனை தடைகள் ஓர் பெண்ணுக்கு!
பெண்ணியமே! தடை தாண்டி வா
இந்திய தேசமதை தாயாக தரிசிக்கும்
மேன்மை கொண்ட மக்களும்
நிரம்பியுள்ள நாடிது....

பயம் விலக்கு! துயர் நீக்கு!
புத்துணர்வு கொள்! புது வெள்ளமாய் பொங்கு!
மானுடம் உனக்காய் கரம்தட்டிக் காத்திருக்கு!
தடைகளைத் தகர்த்து தாயகம் பெருமைப்படுத்து!

விஞ்ஞானக் கூடமும், மெய்ஞ்ஞான பாடமும்
தொழில்நுட்ப வேகமும், பொழில்கவி தாகமும்
முத்தமிழ் தேடலும் தத்துவப் பாடலும் – உலகின்
எதிர்காலத் மாற்றமும் வீசும் ஏற்றமும்

உனக்காய் தவமிருக்கு – நீ
கணக்காய் களமிறங்கு
கற்றுவைத்த வித்தைகளை
கட்டவிழ்த்து வெற்றி கொள்ளு
தடைகளைமீறு, தனித்துவம் பாரு
தாய்நாட்டின் பேரு, புகழ் காணுமாறு
தடைகளை மீறு...
பெண்ணே!

தடைகளை உடை
சரித்திரம் படை
திறந்திடு அறிவுமடை

சிறந்த கல்வி நீமுடை
பெண்ணடிமைப் புடை
புது பாரதம் உன் விடை
வீறுகொள் வெற்றிநடை
இனி ஏதடி உனக்குத் தடை

அறிவுச்சுடரே! அன்பின் உருவே, தடைமீறி கற்றிடுவாய் கல்வி
அனைத்தையும் படைப்பாய் – நீ கல்கி....
உன்னால் மட்டும் முடியும் – பெண்ணே
தடைகளைத் தாண்டி வா...

க.இராஜேஸ்வரி,
மயிலாடுதுறை ஒருங்கிணைப்பாளர்
மயிலாடுதுறை – 7373684441

## ONE LETTER WORDS

1. An insect - B
2. A Source of Water - C
3. A Part of our body - I
4. Positive Answer - S
5. A Hot Drink - T
6. Second person - U
7. First Person Plural - V
8. A Question - Y
9. Standing in Predifined Order - Q

## DISCIPLINE IS ALWAYS 100%

| | |
|---|---|
| D - Stands in the 4th Place. | 04 |
| I - Stands in the 9th Place. | 09 |
| S - Stands in the 19th Place | 19 |
| C - Stands in the 3rd Place | 03 |
| I - Stands in the 9th Place | 09 |
| P - Stands in the 16th Place | 16 |
| L - Stands in the 12th Place | 12 |
| I - Stands in the 9th Place | 09 |
| N - Stands in the 14th Place | 14 |
| E - Stands in the 5th Place | 05 |

-------------
Total 100
-------------

## கல்வி

"கசப்பு" என்று நினைத்து
"இனிப்பாய்" சுவைத்து
"அமிழ்தாய்" உண்ணும் ஒரு வகையான மாத்திரை.

## கணித வித்தைகள்

3 இலக்கங்கள் கொண்ட எண்ணை எழுத வேண்டும். அதே எண்ணை மீண்டும் எழுதிய எண்ணின் பக்கத்திலேயே எழுத வேண்டும். இப்போது 6 இலக்கமாகியுள்ள அந்த எண்ணை 11–ஆல் வகுத்தால் மீதியின்றி வகுபடும். வரும் ஈவை 13ஆல் வகுத்தால மீதியின்றி வகுபடும். இப்போது கிடைக்கும் ஈவை 7–ஆல் வகுத்தால் முதலில் நாம் எடுத்துக்கொண்ட 3 இலக்க எண்கள் கிடைக்கும்.

(எ.கா) $\frac{965\,965}{11} = \frac{87815}{13} = \frac{6755}{7} = 965$

## புகழ்பெற்ற ஏழைகள்

ஆப்ரஹாம் லிங்கன் – விறகு வெட்டியின் மகன்
பாலகங்காதர திலகர் – தொடக்கப்பள்ளி ஆசிரியரின் மகன்
சாமுவேல் ஜான்சன் – பழைய புத்தக வியாபாரியின் மகன்
ஜோசப் ஸ்டாலின் – செருப்புத் தைப்பவரின் மகன்
மேரிகியூரி – வேலைக்காரியாக இருந்தவர்
தாமஸ் ஆல்வா எடிசன் – தச்சரின் மகன்
கரிபால்டி – ஏழைச் செம்பவரின் மகன்

## பென்சிலின் பெருமை!

நாம் எழுதப் பயன்படுத்தும் பென்சில்
பார்ப்பதற்குச் சிறிதாக இருந்தாலும், அதை வைத்து
58 கி.மீ. நீளத்துக்குக் கோடு போடலாம்.

## நம்பிக்கை

ஏறித்தான் பாரேன்
இமயமும் இறங்காமலா போகும்...!

S.RAJESWARI
M.A. (H); B.Lit.(T); B.Ed., M.Sc. Yoga,
Mayiladuthurai, Nagai Dt.

# OUR GOD IS AN AWESOME GOD

He knew us all before we were born,
He also knows when we'll be gone
He knows us by our name,
He's the one, who asks no fame
When the world looks for money,
Trying all possible villainy
His lyes are still on us.
He is the greatest pillar for all people on earth,
No many can compensate his worth
He is our awesome god, our lord,
Who always cares for us.

**C.CANIGHALAKSHMI**
"VIII" STD
ST. JOSPEH OF CLUNY HIGHER
SECONDARY SCHOOL,
PUDUCHERY

## ஈடு இணை இல்லையே

இல்லையே இணை இல்லையே!
ஈடு இணை இல்லையே!
இயேசுவின் அன்பிற்கும்
தெரசாவின் பண்பிற்கும்
காந்தியின் வாய்மைக்கும்
காமராசரின் எளிமைக்கும்
வள்ளுவரின் வெண்பாவுக்கும்
பாரதியின் கவிப்பாவுக்கும்
கம்பனின் காவியத்திற்கும்
ரவிவர்மாவின் ஓவியத்திற்கும்
இல்லையே இணை இல்லையே!
ஈடு இணை இல்லையே!

மணி அடித்தால் பணியாளர்களின் வேலை முடிந்துவிடும்
ஆனால், மணி அடித்தாலும் பணி தொடர்வது ஆசிரியர்கள் மட்டுமே!

எங்களை உலகத்தை பார்க்க வைத்தது
எங்கள் பெற்றோர்கள்
உலகமே! எங்களை பார்க்கவைப்பது எங்கள் ஆசிரியர்கள்.
சிற்பி சிலையை செதுக்கினால்தான் நாம்
எல்லோரும் கடவுளை வழிபட முடியும்
அதுபோல, சிற்பியாக இருந்து நம்
ஆசிரியர்கள் எங்களை செதுக்கிறார்கள்.
சுவாசத்தை கொடுத்தவர்கள் பெற்றோர்கள்
எங்களுக்கு சுவாசமாக இருப்பவர்கள்
ஆசிரியர்கள்.
கல்விக்கு வேண்டும் பயிற்சி
இதுவே என் முயற்சி

**செ.சுபலட்சுமி,** எட்டாம் வகுப்பு, “அ” பிரிவு
சவரிராயலு அரசு பெண்கள்
உயர்நிலைப்பள்ளி, புதுச்சேரி

## கவிதை
## தலைப்பு: காற்று

எங்கு எதை
தொலைத்ததோ
தெரியவில்லை.
யார கண்ணுக்கும்
தெரியாமல்,
எதையோ தேடி
தினமும் திரிகிறது.

V.ARIHARAN, V.STD
G.P.S. PAKKAMUDAYANPET

# நான் மருத்துவரானால்

**முன்னுரை:**

மருத்துவப்பணி என்பது புனிதமான ஒரு பணியாகும். ஒரு மனிதன் கடவுளுக்கு அடுத்த கடவுளாய் நினைப்பது மருத்துவரை மட்டுமே. மருத்துவரிடம் நாம் எதையும் மறைக்கக்கூடாது. நான் மருத்துவரானால் என் பணியையும், குறிக்கோளையும், செயல்பாட்டையும், எப்படி செயல்படுத்துவேன் என்று இக்கட்டுரையில் காண்போம்.

**என் பணி:**

ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிப்பேன். பணக்காரர், ஏழை என வேறுபாடுகள் பார்க்காமல் அனைவரிடமும் சரிசமமான கட்டணத்தை வாங்குவேன். அதில் எனக்குத் தேவையான பணத்தை எடுத்துக்கொண்டு மீதி பணத்தை ஏழை எளிய மக்களுக்கு தானம் செய்வேன். என்னிடம் சிகிச்சை எடுக்க வருபவர்களிடம் ஒரு தோழியைப் போன்றும் சகோதரியைப் போன்றும் நடந்து கொள்வேன்.

**என் குறிக்கோள்:**

ஏழை எளிய மக்களுக்காக ஒரு மிகப்பெரிய மருத்துவமனையை கட்டுவதே என் குறிக்கோளாகும். குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு சிகிச்சை அளிப்பேன். வேறுபாடுகள் பார்க்காமல் மக்களுக்கு என் மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை அளிப்பதே என் குறிக்கோளாகும்.

**செயல்பாடு:**

நான் சிறிய கிராமங்களுக்குச் சென்று அங்கு மருத்துவ முகாம் நடத்தி ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிப்பேன். நாட்டுக்கு நிறைய சேவைகள் செய்வேன். நான் பிரசவம் பற்றியும், குழந்தைகள் நலத்தை பற்றியும் நிறைய படிப்பேன்.

**முடிவுரை:**

மருத்துவர் கடவுளைப் போன்றவர். அப்புனிதமான பணியை நான் நேர்மையாக செய்வேன். என்னை நம்பி சிகிச்சை எடுக்க வரும் மக்களை நான் நல்ல விதமாக சிகிச்சை அளித்து காப்பேன்.

# மனவளக்கலை ஒருகண்ணோட்டம்

**நான்கு செயல்முறைகள்:**

1. அகத்தவம் – Meditation
2. அகத்தாய்வு – Introspection
3. குணநலப்பேறு – Sublimation
4. முழுமைப்பேறு – Perfection

**மூன்று வளர்நிலைகள்:**

1. மனவிரிவு – Expansion of the Mind
2. இயற்கை விதி அறிதல் – Understanding the Law of Nature
3. எண்ணம், சொல், செயலில் விழிப்புடன் இருத்தல் – Maintaining awareness in thought, word and deed

**அறிவின் ஐந்து ஆற்றல்கள்:**

1. நுண்மாண் நுழைபுலன் – Perspicacity
2. ஏற்புத்திறன் – Receptivity
3. தக அமைதல் – Adaptability
4. பெருந்தன்மை – Magnanimity
5. ஆக்கத்திறன் – Creativity

**அறிவின் ஐந்து உயர்நிலைகள்:**

1. இசைவு – Harmony
2. நிறைவு – Satisfaction
3. மகிழ்வு – Happiness
4. மெய்யறிவு – Wisdom
5. அமைதி – Peace

**எளியமுறை யோகப்பயிற்சிகள்:**

1. உடல் நலம் பேண – எளிய முறை உடற்பயிற்சிகள்

2. மனவளம் பெருக – எளிய முறை தியானப் பயிற்சிகள்

3. உயிராற்றல் பெருக – எளிய முறை காயகல்பப் பயிற்சிகள்

4. உயர்ந்த பண்புகளும் குணநலன்களும்பெற – எளியமுறை அகத்தாய்வு பயிற்சிகள்

5. வாழ்வில் முழுமைபெற – இறைஞான விளக்கங்கள்

**<u>உடற்பயிற்சியின் சிறப்புகள்:</u>**

1. இன்றைய வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்கேற்றவாறு மருத்துவ ரீதியாக வடிவமைக்கப்பட்டது.

2. இப்பயிற்சிகளின் மூலம் நமது உடலிலுள்ள இரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காற்றோட்டம், உயிரோட்டம் சீராகின்றன.

3. நமது உடலில் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையுள்ள, அனைத்து உள்ளுறுப்புகளும் ஆரோக்கியம் பெறுகின்றன.

4. நாளமில்லாச் சுரப்பிகளின் இயக்கம் சீரடைவதால் உடல் நலத்தோடு, மனவளமும் உயர்வடைகிறது.

5. நோய்கள் படிப்படியாக விலகுகின்றன. நோய் எதிர்ப்புச் சக்தி பெருகிறது. கடுமையான நோய்கள் கூட தீவிரம் அடையாமல் தடுத்துகொள்ள உதவும்.

6. உடலை வருத்தாமல் குறைந்த நேரத்தில் செய்து முடிக்கக்கூடிய பயிற்சிகள் எல்லாகால நிலைகளுக்கும் ஏற்றது.

7. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், பெரியவர்கள் என அனைத்து தரப்பினரும் மிகச் சுலபமாக செய்ய முடியும்.

**<u>மதிப்புமிக்க இன்றைய சொத்து “மாணவர்களே”:</u>**

நாட்டிற்கும், வீட்டிற்கும் மதிப்புமிக்க சொத்து இன்றைய மாணவர்களே, மனித வாழ்வில் மாணவப் பருவமே முக்கிய கால கட்டம், அவர்களுக்கு அளிக்கப்படும். கல்வி, எழுத்தறிவு, தொழிலறிவு, இயற்கைத் தத்துவ அறிவு, ஒழுக்க பழக்க அறிவு இவை இணைந்ததாக இருக்க வேண்டும். ஆனால், அவர்களுக்கு இன்று கிடைக்கும் கல்வி எழுத்தறிவு, தொழிலறிவு பெறத் தக்கதாகவே உள்ளது. இவை பொருளாதாரத்தில் உயர்வடைய மட்டுமே உதவுகிறது.

அகப்பண்பாட்டுக் கல்வியின் அடித்தளத்தில் மற்ற கல்விகள் அமைந்தால் மட்டுமே, இன்றைய இளைஞர்களின் எதிர்காலமும், நாட்டின் எதிர்காலமும் உயர்வும், சிறப்பும் உடையதாக அமையும் அகப்பண்பாடுகளை வளர்க்கும் இயற்கைத் தத்துவ அறிவு, ஒழுக்கப்பழக்க அறிவு கொடுக்கப்பட்டால் அவர்கள் வாழ்வு அன்பும், அமைதியும், மனநிறைவும், மகிழ்ச்சியும் உடையதாக அமையும்.

இதன் மூலம் அனைத்துத் துறைகளிலும் ஒழுக்கம், நேர்மை, கடமையுணர்வு, சேவை மனப்பான்மை போன்ற உயர்ந்த பண்புகள் வளர வாய்ப்பாக அமையும். மாணவர்கள் அனைவரும் வெற்றியும், சாதனையும் படைப்பவர்களாக ஆவார்கள்.

தனக்கும், பிறருக்கும் நன்மையே விளைவிக்கக்கூடிய இத்தகைய பண்பாட்டுக் கல்வியை அனைவருக்கும் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் உலக சமுதாய சேவா சங்க நிறுவனர். அருட்தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்கள் மனவளக்கலையை வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

இக்கல்வியில் பாடங்களும், பயிற்சி முறைகளும் விஞ்ஞான விளக்கத்துடன் உள்ளன.

இப்பயிற்சி சாதி, மத, இன எல்லைகளைக் கடந்து அனைவருக்கும் பொதுவாகவும், பொருத்தமாகவும் இருக்கிறது. பல கல்வி நிறுவனங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் பாடங்களாகவும் பட்டயப் படிப்புகளாகவும் கற்பிக்கப்பட்டு வருகிறது. அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இலவசமாக இக்கல்வியை வழங்க தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது மதிப்புமிக்க இக்கல்வியை மாணவர்கள் கற்று வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

**<u>சில வித்தியாசமான கணக்குகள்...</u>**

**<u>கூட்டல்:</u>**
மனிதன் + தன்னம்பிக்கை = வெற்றி
மனிதன் + கவலை = கண்ணீர்
மனிதன் + ஆனந்தம் = புன்னகை
மனிதன் + இயலாமை = கோபம்
மனிதன் + அன்பு = காதல்
மனிதன் + ஆசை = தாம்பத்தியம்

**<u>கழித்தல்:</u>**
மனிதன் – தன்னம்பிக்கை = தோல்வி
மனிதன் – கவலை = உற்சாகம்
மனிதன் – இயலாமை = முயற்சி
மனிதன் – அன்பு = குரோதம்
மனிதன் – ஆசை = அமைதி

**<u>பெருக்கல்:</u>**
மனிதன் x தன்னம்பிக்கை = சாதனை
மனிதன் X கவலை = தற்கொலை
மனிதன் x ஆனந்தம் = ஆயுள்
மனிதன் x இயலாமை = அவதி
மனிதன் x அன்பு = மனிதாபிமானம்
மனிதன் x ஆசை = பேராசை

**கணேசன்,** ஒருங்கிணைப்பாளர்

## கவிதை

## கணக்கு ஒரு பிணக்கு அல்ல, அது அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம்!

## கணித கவிதை

சார்ந்து வாழ சார்பியலும்
இயல்பாய் வாழ இயற்கணிதமும்
அணி அணியாய் அழகு சேர்க்கும் அணிகளும்
பிரிவினை இல்லாமல்
ஒன்றுபட்டு வாழ கலப்பெண்களும்
நேர்மையாய் வாழ மெய்யெண்களும்
பகிர்ந்து வாழ பின்னப் பகுதியும்
வித்தியாசங்களை விவரிக்க விகிதப் பகுதியும்
வாழ்வியல் கணிதங்களே!

அன்பைக் கூட்டி, ஆசையைக் கழித்து
இன்பத்தைப் பெருக்கி
ஈகையை வகுத்துக் கொடுத்து
உண்மையை இருமடங்காக்கி
எண்ணத்தைத் தொகையீட்டி
ஏற்றத்தாழ்வின்றி சமூகத்தை வகையீட்டி
ஐயத்தை சுழியாக்கி,

ஒற்றுமையை ஒற்றைபடியாக்கி
ஓயாத உழைப்பை இருபாலருக்கும் வகையீட்டி
சிறகடித்துப் பறக்கும் சிட்டுக்குருவியாய்
சிறிது சிறிதாய் நாமும் எண்களை ஏணிப்படியாக்கி
கணிதத்தில் இனிதாய் கால்தடம் பதிப்போம்.

**ப.நிவேதா**
புனித சின்னப்பர் மகளிர் மேல்நிலைப்பள்ளி
பதினொன்றாம் வகுப்பு, ஒருங்கிணைப்பாளர் – கணேசன் அவர்களுக்கு
கீழ் – 9942793478

## உணவில் ஒழுங்கு

1. உடலை இயக்குவதற்குத் தேவையான ஆற்றல் உணவிலிருந்து கிடைக்கின்றது.

2. உடல் தேவையின் அளவறிந்து, சத்தான, சுத்தமான உணவை அளவோடும் முறையோடும் உண்ண வேண்டும்.

3. தானியங்களையும், காய்கறிகளையும் தேவையான அளவு அன்றாட உணவில் தகுந்த விகிதத்தில் சேர்த்துக் கொள்வது நல்லது.

4. இரும்பு, புரதம், தாது, கொழுப்பு, வைட்டமின்கள் போன்ற சத்துக்கள் செறிவாக உள்ள உணவை தேர்வு செய்து உண்பது சிறப்பு.

5. உணவின் அளவு அதிகமானால் சீரணமான அளவு போக மீதம் உள்ள உணவு வயிற்றிலேயே புளித்துப் போகும். புளிப்புத்தன்மையிலிருந்து வெளிவரும் வாயுவே உப்புசம் என்கிறோம்.

6. உபரியான புளிப்பு இரத்தத்தில் சேரும்போது நரம்புகள் பாதிப்புக்கு உள்ளாகும்.

7. புளிப்பு வெறும் காற்காக மாறி நரம்பில் புகுந்து மின்குறுக்கை ஏற்படுத்தி, கை, கால், செயல் இழக்கும்படி விழும்படி செய்துவிடும்.

8. எனவே, உணவில் அளவுமுறை கடைபிடிக்க வேண்டும்.

9. அரை வயிறு அளவு உணவும், கால் பாகம் நீரும் மீதம் காலியாக இருப்பதே சிறந்தது. இதனால் உணவு நல்ல முறையில் ஆற்றலாக மாற வாய்ப்பு அதிகம்.

10. சாத்வீக, ரஜோஸ, தாமச உணவு என்று மூவகை உணவு உண்டு.

11. தானியங்கள், காய்கறிகள், கீரைகள், பழவகைகள் முதலியன சாத்வீக உணவுகள், இவை பொறுமை, அன்பு, இரக்கம், சகிப்புத்தன்மை போன்ற சாந்தமான நற்குணங்களை வளர்க்கும் தன்மை உடையன.

12. புலால் வகைகள் மற்றும் ஏலம், கிராம்பு, மிளகாய் போன்ற உணவு

வகைகள் ரஜோ உணவாகும். இவை தீய எண்ணங்களையும், முரட்டுத்தனமான செயல்களையும் தூண்டும். நோய்கள் உண்டாக்கும்.

13. பீட் ரூட், காரட், டர்னிப், கருணைக்கிழங்கு தவிர்த்த கிழங்கு வகைகள், காய்களில சுரைக்காய், குமட்டி போன்றவை மந்ததன்மையை அதாவது தாமச குணங்குகளைத் தருவனவாகும்.

14. இயற்கை உணவுகளான பழங்கள் பச்சைக் காய்கறிகள் கீரை வகைகள், உலர்ந்த விதைகள் முதலியவற்றை சமைக்காமலே உண்ணலாம்.

**<u>வாழ்க்கையில் குறைக்க வேண்டிய உப்புகள்....</u>**

கணவன்கள் – படபடப்பு....
மனைவிகள் – நச்சரிப்பு....
டீன் ஏஜ்க்கள் – பரபரப்பு....
மாணவர்கள் – ஏய்ப்பு.......
மாமியார்கள் – சிடுசிடுப்பு....
மருமகள்கள் – கடுகடுப்பு....
வக்கீல்கள் – ஒத்தி வைப்பு...
டாக்டர்கள் – புறக்கணிப்பு...
அரசியல்வாதிகள் – ஆர்ப்பரிப்பு...
வயதானவர்கள் – தொணாதொணப்பு...

ஆனால் யாரும் குறைக்கத் தேவையில்லாத ஒரே “ உப்பு” சிரிப்பு. அது உடம்புக்கு மிகக்சிறப்பு....

**<u>வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டியவை</u>**

அன்பாய் இருப்பதே! உயர்ந்த அறிவு!
பழிவாங்குதல் வீரமல்ல; பொறுத்திருப்பதே வீரம்!
தனக்கு எது கெடுதலோ; அதை பிறருக்குச் செய்யாதே!
முதுமை அழகை கொடுக்கும்; கர்வம் வாழ்வை கெடுக்கும்!
காலம் உயிர் போன்றது; அதை வீணடிப்பது தற்கொலைக்குச் சமம்!
இதயத்தை மலர் போன்று வைத்திரு; எண்ணங்கள் நறுமணம் வீசும்!
துருபிடித்து தேய்வதைவிட உழைத்துத் தேய்வதே மேல்!
இளமையில் அடக்கம் மலர் மணம் போன்றதாகும்!
அதிர்ஷ்டம் இறைவன் உருவாக்கித் தரும் சந்தர்ப்பம்!
தேவையில்லாததை நீ வாங்கினால்; தேவையானதை விற்க நேரிடும்!
மனதிருப்தி கொள்ளும் இயல்பே; மனிதனின் மகத்தான பலம்!

**ஜெயந்தி கணேசன்**
ஒருங்கிணைப்பாளர்

நட்பு என்பது திருக்குறள் வரிபோல
முதல்வரி நீ
இராண்டாம் வரி நான்
மறந்துக்கூட பிரித்துவிடாதே
நான் அர்த்தமற்று போய்விடுவேன்

நட்புக்கு வயது அவசியமில்லை
பிறப்பு முதல் இறப்பு வரை
தொடரும் உன்னதமான உறவே
நட்பு

பாசம் என்னும்
மொபைல்
உங்களிடம் இருக்கும் வரை
அன்பு என்னும் SMS வந்து
கொண்டே இருக்கும்.

உன்னை பார்க்கும்போது
தான் கண்கள் இருப்பதைக் கண்டேன்
அதே, உன்னை பிரிந்து சென்ற போது
தான் அதில் உள்ள கண்ணீரை உணர்ந்தேன்

வாழும் வரை வாழ்க்கை
வெல்லும் வரை தோல்வி
வலிக்கும் வரை கண்ணீர்
உதிரும் வரை பூக்கள்
மறையும் வரை நிலவு
மரணம் வரை நம் நட்பு

அறிமுகம் இல்லாமல் வந்தோம்
அடிக்கடி பேசிக் கொண்டோம்.
உறவுகளுக்கு மேல் உயிர் ஆனோம்
காலங்கள் கடந்து சென்றாலும்
கடைசி வரை தொடர வேண்டும்
நம் நட்பு

பிரிவு என்ற ஒன்று இருந்தால்
தான் சந்திப்பு என்ற ஒன்று
இருக்கும்
So மீண்டும் சந்திப்போம்.

முதல் வயதில் நீ அறிந்த மூன்றெழுத்து
“அம்மா”
பருவ வயதில் நீ அறிந்த மூன்றெழுத்து
“காதல்”
குடும்ப வயதில் நீ அறிந்த மூன்றெழுத்து
“மனைவி”
சாகும் வரை நீ அறியும் மூன்றெழுத்து
“நட்பு”

தாயின் அன்பு தாராளமானது
தாரத்தின் அன்பு தாமதமானது ஆனால்
நண்பனின் அன்போ ஏராளமானது

எங்கோ பிறந்தாலும் எப்படியோ
இருந்தாலும் உணர்வை உணர்வுக்கு
ஒன்று சேர தருவது தான்
உயிர் நட்பு

சூரியனும் சந்திரனும்
வானுக்கு சொந்தம்
தென்றலும் புயலும்
காற்றுக்கு சொந்தம்
நீயும் நானும்
நட்புக்கு சொந்தம்

**R.Sathya,** X Std
St. Antony’s High School,
Co-ordinator : **ஜெயந்தி கணேசன்**
Mobile : 9095717483

## கவிதை
## தாய்

உயிரெழுத்தில் "அ" எடுத்து
மெய் எழுத்தில் "ம்" எடுத்து
உயிர்மெய் எழுத்தில் "மா" எடுத்து
அழகு தமிழில் கோர்த்தெடுத்த முத்து அம்மா.

உனக்கு வலி கொடுத்து
பிறந்த காரணத்தால் தானோ என்னவோ...
எனக்கு வலி ஏற்படும் போதெல்லாம்
உன்னையே அழைக்கிறேன்.
அம்மா என்று.....

புரண்டு படுத்தால்
நாம் இறந்துவிடுவோமோ
என்று கருவில் இருந்த
நமக்காக தூக்கத்தை கூட
தொலைத்து விட்டு இரவில்
விழித்திருந்த சூரியன் அம்மா,

ஒவ்வொரு நாளும் கவலை படுவாள், ஆனால்!
ஒருநாளும் தன்னைப் பற்றி,
கவலைப்பட மாட்டாள் அம்மா.

அன்று நம் தொப்புள் கொடியை
அறுத்தது நம் உறவை பிரிக்க அல்ல
அது நம் பாசத்திற்கு தொடக்கத்தின் வெட்டப்பட்ட ரிப்பன்.

அப்பாவுக்கு பிடித்தது – தக்காளி சாதம்
தம்பிக்கு – தோசை
எனக்கு பிடித்தது– பிரியாணி
அம்மாவுக்கு பிடித்தது – மிச்சமான எதுவோ!!!

வார்த்தைகள் இல்லாமல் பேசினேன்.

கண்கள் இல்லாமல் ரசித்தேன்.
காற்று இல்லாமல் சுவாசித்தேன்.
கவலைகள் இல்லாமல் வாழ்ந்தேன்.
என் தாயின் கருவறையில் மட்டும்.

ஒரு தாயின் உணர்வு

இன்பமான நேரம்
நீ என் மார்பில்
உறங்கிக்கொண்டு இருப்பது
சந்தோஷமாக இருக்கும்
அதே சமயம்
கவலையாகவும் இருக்கும்
ஏனெனில்
என் இதய துடிப்பு
உன்னை எழுப்பி விடுமோ என்று....

**N.Anu Priya**
கவிதை & வரைபடம்
A.V.C. College

## Flower

முயற்சி என்பது
விதைபோல...
அதை விதைத்துக் கொண்டே இரு....
முளைத்தால் மரம்....
இல்லையென்றால் – அது
மண்ணிற்கு உரம்....

## Computer Set

Apple - Ball
Cat - Dog
Egg - Fish
Girl - Hen
Ice - Jug
Key - Lion
Monkey - Note

**R.Monika, V-A**
C.N.P. School, Salem-6

# கவிதைகள்

மனம் விட்டுபேச
ஒரு நல்ல நட்பு கிடைத்தால்
அதுவும் தாய் மடிதான்

உரிமை இல்லாத உறவும்
உண்மை இல்லாத அன்பும்
நேர்மை இல்லாத நட்பும்
நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும்
என்றும் நிரந்தரமில்லை.

யோசித்து வாழ ஆயிரம்
உறவுகள் உண்டு. ஆனால்
நேசித்து வாழ ஒரே உறவு
நட்பு மட்டும்தான்.

பிறக்கும்போது
நண்பன் யாருமில்லை
இறக்கும்போது நண்பணை
தவிர யாருமில்லை.

என்னை சுமந்த அவளை
மறுஜென்மத்தில் நான் சுமக்க
ஆசைப்படுகிறேன் என் கருவறையில்
அல்ல, அவள் நடந்து செல்லும்போது அவள்
பாதம் நோகாமல் இருக்க அவள் செருப்பாக.

உயிர் இல்லாத
உடலுக்கு, உயிர் தரும்
ஒரே உறவு நட்பு.

**V.Mohanapriya**
V-C, Rotary Club Matriculation Higher Secondary School,
Thirumanjana Veedhi, Koranad, Mayiladuthurai,
Co-ordinator : A.Vijayalakshmi
Mobile No: 9688191963

## தமிழ்நாட்டின் முதன்மைகள்

1. நோபால் பரிசு பெற்ற முதல் தமிழர் சர்.வி.சிராமன் (1930)

2. இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த தமிழர். இராஜாஜி

3. பாரத ரத்னா விருது பெற்ற முதல் முதலமைச்சர். இராஜாஜி

4. தமிழகத்தின் முதல் முதலமைச்சர் – சுப்புராயலு ரெட்டியார் (1920-21)

5. தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சர் – திருமதி. ஜானகி ராமச்சந்திரன் (1990)

6. தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் – செல்வி பாத்திமா பீவி (1997-2001)

7. தமிழகத்தின் மற்றும் இந்தியாவின் முதல் மாநகராட்சி, சென்னை (1688)

8. சென்னை மாநகராட்சியின் முதல் தலைவர் – சர்.பி.டி. தியாகராயர்.

9. சென்னை மாநகராட்சியின் முதல் மேயர் – சர்.ராஜா முத்தையா செட்டியார்.

10. சென்னை மாநகராட்சியின் முதல் பெண் மேயர் – தாரா செரியன்.

11. ஞானபீட விருது பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் – அகிலன் (1975)

12. தாதா சாகேப் பால்கே விருது பெற்ற முதல் தமிழ் நடிகர் சிவாஜி கணேசன். (1996)

**V.மதுஸ்ரீ**, VIII-“இ” பிரிவு,
அ.ம.மே.நி.பள்ளி, சேலம் –1

## கவிதை

கல்லில் செய்த சிலையைவிட
கருவில் சுமந்த தாயே சிறந்தவள்
தாயிற் சிறந்த கோயிலுமில்லை!
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை!

தாய்நாட்டை போல் ஒரு நாடில்லை
தாய்மொழியாம் தமிழ் மொழி போல்

சிறந்த செம்மொழி இல்லை!
தாய்மொழி தமிழை வளர்ப்போம்!
தாய்நாடு பாரத நாட்டை காப்போம்!

**V.மதுஸ்ரீ**, VIII-“இ” பிரிவு,
அ.ம.மே.நி.பள்ளி, சேலம் –1
ராகவேந்திரா மெட்ரிக்
மேல்நிலைப்பள்ளி, வீரகனூர்

## கட்டுரை

**முன்னுரை:**

தன்னலமற்ற தலைவர், கர்மவீரர், கல்விகண் திறந்த முதல்வர், ஏழைபங்காளர் என்னும் புகழுரைக்கு எல்லாம் உரியவர் காமராசர். இவர், விருதுநகர் “குமாரசாமி, சிவகாமி” அவர்களுக்கு 1903-ம் ஆண்டு மகனாகப் பிறந்தார்.

**இளமைப் பருவம்:**

நாட்டாண்மைக்காரராக இருந்த காமராசரின் தாத்தா, பல சமயங்களில் பஞ்சாயத்துக் கூட்டங்களுக்கு தன்பேரன் காமராசரையும் அழைத்துச் செல்வார். காமராசர் ஓர் ஓரமாக உட்கார்ந்தபடி தாத்தா கூறும் தீர்ப்புகளைக் கவனிப்பார். பின்பு ஓர் ஆண்டு “தமிழ்ப்பாடம்” கற்றார்.

**கல்விப் புரட்சி:**

காமராசர் காலத்தில் கட்டாயக்கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது. தெருதோறும் தொடக்கப்பள்ளி, ஊர்தோறும் உயர்நிலைப்பள்ளி என்பதே அவரது நோக்கமாக அமைந்தது. பள்ளி வேலைநாட்களை நூற்றெண்பதிலிருந்து 200 ஆக உயர்த்தினார் காமராசர்.

தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் இவரால் தொடங்கப்பட்டு பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டது.

**காமராசருக்குச் செய்த சிறப்புகள்:**

காமராசருக்கு நடுவண் அரசு. “பாரத ரத்னா” விருது அளித்தும் நாடாளுமன்றத்தில் இவருக்கு ஆளுயர வெண்கலச் சிலையை நிறுவியும் சிறப்பித்தது.

மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு “மதுரை காமராசர் பல்கலைக்கழகம்” என்று பெயர் சூட்டியது. கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் கட்டியது.

**சிறப்பு:**

காமராசரை “கல்விகண் திறந்தவர்” எனக்கூறப்படுகிறது.
காமராசர் பயன்படுத்திய காரை அரசு எடுத்து கொண்டது.
காமராசரின் உடலை நெருப்பு எடுத்து கொண்டது.
அவரின் பெயரை வரலாறு எடுத்துகொண்டது.

**முடிவுரை:**

காமராசர் பல்வேறு தலைவர்களில் ஒருவர். இவர் கல்விப் பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். இத்தகைய தலைவரை நாமும் போற்றி செயல்பட வேண்டும்!

**V.Guru,** XII Std.
Sri Ragavendra Matric Hr. Sec. School
Co-ordinator : Jayanthi Ganesan
Mobile : 9095717483

## கவிதைகள்
## கல்வி

இமையில்லா கண்களும்,
நீரில்லா கடலும்,
நிலவில்லா வானமும்,
உயிரில்லா உடலும்,
உருவமில்லா சிலையும்,
தோல்வியில்லா வெற்றியும்,
இலையில்லா மரமும்,
இரக்கமில்லா மனமும்,
ஒழுக்கமில்லா கல்வியும் ஒன்றுதான்!!

## பிளாஸ்டிக்கை தவிர்ப்போம்

துணிப்பை என்பது எளிதானது
தூர எறிந்தால் உரமானது!
பிளாஸ்டிக் அழகானது
தூக்கி எறிந்தால் விஷமானது!

## நட்பு

உயிர் தந்தது தந்தை
உடல் தந்தது தாய்
மூச்சு தந்தது காற்று
உணவு தந்தது தாவரம்
அறிவை  தந்தது ஆசான்
ஆரோக்கியம் தந்தது இயற்கை
உணர்வு தந்தது என் தாய் தமிழ்
எனக்கு நல்ல நலனை தந்தது.
என் நட்பு....

## தாயின் பாசம்

சிரிக்கின்ற குழந்தையை எல்லோரும்
விரும்புவார்கள். ஆனால்
அழுகின்ற குழந்தையை தாய்
மட்டும்தான் விரும்புவாள்.

## அழகு

இலைகள்
முளைப்பதும் உதிர்வதும்
மரங்களுக்கு அழகு;

பூக்கள்
பூப்பதும் உதிர்வதும்
செடிகளுக்கு அழகு;

அலைகள்
கரையை தொடுவதும் போவதும்
கடலுக்கு அழகு;

இதுபோல் வாழ்கையில்
வரும் – சில
இன்பங்களும்... துன்பங்களும்
மனிதர்களுக்கு அழகு;

N.**மன்சுரா பானு,** X–ம் வகுப்பு, 9597265475.
G.ஜெயந்தி கணேசன் 9095717483
புனித சின்னப்பர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, மயிலாடுதுறை

## சுற்றுப்புறத் தூய்மை

**முன்னுரை:**

"சுத்தம் சோறு போடும்" என்பது பழமொழி. மக்கள் தூய்மையான சூழ்நிலையை விரும்புகின்றார்கள. தன்னையும், தன் வீட்டையும் மட்டும் தூய்மையாக வைத்துக்கொண்டால் போதாது. தன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும். இல்லையென்றால் தொற்று நோய்கள் பரவி உடல் நலத்தைப் பாதிக்கச்செய்துவிடும். எனவே நாம், நமது சுற்றுப்புறங்களை எப்போதும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

**சுற்றுப்புறங்களின் தூய்மை:**

நாம் தெருக்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும். தெருக்களில் சேரும் குப்பைகளை உடனே அப்புறப்படுத்த நகர சபை வண்டிகளைக் கொண்டு வந்து எடுக்கச் செய்ய வேண்டும். இல்லையேல் தெரு நாற்றம்தான் அடிக்கும். ஈக்களும், கொசுக்களும் எங்கும் சுற்றித் தரியும், இதனால் காலரா, மலேரியா போன்ற கொடிய நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. அதனால் அந்தந்தத் தெருவில் உள்ளவர்களே, தாம் வாழும் இடங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். சுற்றுப்புறங்களில் தூய்மைப்பற்றிக் கருதும்போது கண்ட கண்ட இடங்களில் எச்சில் உமிழ்தலும், மலம் கழித்தலும் தவிர்க்கத் தக்கனவாகும். இன்றும் பெரு நகரங்களிலுள்ள சந்துகளும், சிறு தெருக்களும் சாக்கடை நீர் நிரம்பி

ஓடும் இடங்களாக இருக்கக் காண்கின்றோம். இது தவிர ஆறு, குளங்கள், ஏரிகளை அசுத்தம் செய்கின்றவர்கள் பலர் இருக்கின்றனர், குடிப்பதற்குத் தண்ணீர் எடுத்துச் செல்லும் நீர் நிலைகளில், அழுக்கு நிறைந்த ஆடைகளைத் துவைப்பதும் உடலைக் கழுவுவதோடும் மட்டுமில்லாது ஆடு, மாடுகளைக் குளிப்பாட்டுவதும் மோசமான செயல்களாகும். இதனால் நோய்க்கிருமிகள் உற்பத்தியாகி, நாம் குடிக்கும் நீரின் மூலம் நம் உயிருக்கே ஆபத்து வருகின்ற அபாய சூழ்நிலைகள் உருவாகி விடும்.

**காற்றும் நீரும்:**

நல்வாழ்வு வாழ விரும்பும், ஒவ்வொருவருக்கும் தூய்மையான காற்றும், தண்ணீரும் மிகமிகத் தேவையாகும். தமிழக அரசு சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றி வருகின்றது. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் காற்று, கழிவு நீர் போன்றவற்றின் வெளியேற்ற அளவுத் தன்மையைக் கண்காணிப்பதும் சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறையின் முக்கியப் பொறுப்புகளாகும். தண்ணீரோ நமக்கு இன்று தேவையான அளவு கிடைக்கவில்லை. கிடைத்த தண்ணீரை சுத்தமாக வைத்திருக்கும் தன்மை, மக்களிடம் இல்லை. காற்று, நீர் மாசுபடுதலைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தமிழ்நாடு அரசு "தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்" என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 5ஆம் தேதி உலகச் சுற்றுப்புறச் சூழல் தினம் மாவட்டத் தலைநகரங்களில் கொண்டாடப்படுகின்றது.

**முடிவுரை:**

சுத்தமாக இருந்தால் நாம் என்றும் ஆரோக்கியமாக வாழலாம் என்பதை உணர்ந்து, சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாத்து வாழ வேண்டும்.

## அம்மா நீ அற்புதம்

அம்மா சொன்ன அற்புதமான பொய்களில் ஒன்று: கடைசி உருண்டையில் தான் எல்லா சத்தும் இருக்கும் இத மட்டும் வாங்கிக்கோடா கண்ணா!

நாம் பெற்ற முதல் இரத்த தானம் எது தெரியுமா? நம் "அம்மா"வின் பால் தான்.

தன் “அம்மா” தனக்கு என்னவெல்லாம் செய்தாள் என்பதை, மனிதன் கடைசி வரை உணர்வதில்லை. அவன் அதை உணரும்போது, அவள் உயிரோடு இருப்பதில்லை.

என் முகம் பார்க்கும் முன்பே,
என் குரல் கேட்கும் முன்பே,
என் குணம் அறியும் முன்பே,
என்னை நேசித்த ஒரே மனித இதயம் என் “அம்மா” மட்டும் தான்.
ஓர் “அம்மா”வின் இறுதி ஆசை.

என் மண்ணறையின் மீது உன் பெயரை எழுதிவை, உன்னை நினைப்பதற்கு அல்ல அங்கும் உன்னைச் சுமப்பதற்கு.

குழந்தைகளின் பல்வேறு அழுகைகளின் அர்த்தம் புரிந்த ஒரே டிக்ஷனரி, “அம்மா” மட்டும் தான். “அம்மா” என்பது வெறும் பெயரல்ல, மறப்பதற்கு! அது உயிரோடு கலந்த உதிரத்தின் உறவு.

ஆயிரம் கைகள் என் கண்ணீரைத் துடைத்துப் போனாலும், ஆறாத துன்பம் “அம்மா”வின் சேவைத் தலைப்பில் துடைக்கும் போதுதான் நீங்கியது.

நான் நேசித்த முதல் பெண்ணும்,

என்னை நேசித்த முதல் பெண்ணும் நீதானே “அம்மா”!

மூச்சடக்கி ஈன்றாய் என்னை என் மூச்சுள்ள வரை காப்பேன் “அம்மா” உன்னை.

அன்பை பற்றி படிக்கும் போதெல்லாம் தவறாமல் வந்து போகிறது “அம்மா”வின் முகம்.

வாழ்க்கையில் தியாகம் செய்பவர் அப்பா.

வாழ்க்கையையே தியாகம் செய்பவர் “அம்மா”.

“அம்மா”.......! அன்று நம் தொப்புள் கொடியை அறுத்தது நம் உறவை பிரிக்க

அல்ல, அது நம் பாசத்தின் தொடக்கத்துக்கு வெட்டப்பட்ட திறப்பு விழா ரிப்பன்!

S.AKSHAYA, IX STD "D"
Guru Gnana Sambandar Mission Mat. Hr. Sec. School
Co-ordinator : A.Vijayalakshmi
Mobile : 9688191963.

## சாலை விதிகள்

**முன்னுரை:**

இன்று, நாளிதழ்களை திறந்து படித்தால், குறைந்தது சாலை விபத்துகள் மூன்றைப் படிக்க நேரிடுகிறது. ஏன் இவ்வாறு தொடர்ந்து பல விபத்துகள் நேரிடுகின்றன? காரணம் சாலைவிதிகளை பெரும்பாலானோர் பின்பற்றாமையே ஆகும்.

**அறிவிப்பு விளக்குகளை மதித்துச் செல்க:**

சிவப்பு விளக்கு ஒளிர்ந்தால் வண்டியை நிறுத்த வேண்டும். மஞ்சள் விளக்கு எரிந்தால் தயாராகவும் பச்சை விளக்கு எரிந்தால் வண்டியை ஓட்டிச் செல்ல வேண்டும்.

**தலைக்கவசம் அவசியம்:**

வண்டியில் செல்வோர் தலைக்கவசம் அவசியம் அணிந்து செல்லவேண்டும். அவ்வாறு சென்றால் விபத்திலிருந்து தப்ப இயலும்.

**கைபேசியில் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்:**

வண்டியில் செல்வோர் கைபேசியில் பேசியபடி சென்றால் கவனம் சிதறி விபத்து ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே, வண்டி ஓட்டுவோர், ஓட்டுவதில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும்.

**முடிவுரை:**

உயிர், விலை மதிப்பற்றது, ஒருமுறை இழந்தால் திரும்ப பெற இயலாது, சாலை விதியை மதிக்காவிட்டால் நம் "தலைவிதி" முடிந்துவிடும், என்பதைத் கருத்தில் கொள்வோம்.

# உடல்நலம் காப்போம்!

**முன்னுரை:**

கிடைத்தற்கு அரியது மனிதப்பிறவி அதைப் பேணிக்காத்து சமுதாயத்திற்கு பயன்தரத்தக்க வாழ்வை நடத்த வேண்டும். “உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்” என்பது திருமூலர் வாக்கு. உயிரைக் காத்துக்கொள்ள உடல்நலம் பேணல் இன்றியமையாதது.

**காலையும் இரவும் பல் துலக்குதல்:**

காலையில் சாப்பிடுவதற்கு முன்பும் இரவு படுக்கைக்கு செல்லும் முன்பும் பல் துலக்கவேண்டும். இவ்வாறு செய்தால் பல்லில் நோய்க்கிருமிகள் தொற்றுவதைத் தவிர்க்க இயலும்.

**நகம் வெட்டுதல்:**

நகத்தில் அழுக்கு சேர்ந்தால் கையில் எடுத்து உண்ணும் உணவோடு அவ்வழுக்கு உடலுக்குள் சென்று நோய் ஏற்பட வாய்ப்புண்டு, எனவே வாரம் ஒருமுறை நம் கை, கால்களில் உள்ள நகத்தை சீராய் வெட்டி பராமரித்தல் வேண்டும்.

**நாள்தோம் குளித்தல்:**

கூழானாலும் குளித்துக் குடி என்பது நம் முன்னோர் வாக்கு, உடல்தூய்மை மிகவும் இன்றியமையாதது, எனவே நாள்தோறும் காலையிலும் மாலையிலும் குளித்தல் வேண்டும்.

**அழுக்கற்ற உடை உடுத்துதல்:**

அழுக்கான உடைகள் நம் உடலில் நோயை உண்டாக்கும் தன்மையானது, கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பது முதுமொழி. நம் உடைகளை நன்கு துவைத்து உலர்த்தி தூய்மையாய் உடுத்துதல் வேண்டும்.

**கீரை, காய்கறிகளை தினமும் உணவில் சேர்த்தல்:**

கீரைகள், காய்கறிகள் ஆகியன உடல்நலத்திற்கு உகந்தவை என்பதால் இவற்றை தினமும் உணவில் அதிகமாய் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். அசைவ உணவை தவிர்த்தல் வேண்டும்.

**முடிவுரை:**

உடல் தூய்மையும், உணவுப்பழக்கங்களும் முறையாய் அமைந்தால் நோயற்ற வாழ்வு வாழ இயலும், மாணாக்கர் இவற்றை தம் வாழ்வில் கடைப்பிடித்து உடல்நலத்தை காத்துக்கொள்ளல் வேண்டும்.

**S.Kanishka,** VII-G
St. Paul’s Girl’s Hr. Sec. School
8056512850
ஒருங்கிணைப்பாளர்
ஜெயந்தி கணேசன், 9095717483

## நான் விரும்பும் கவிஞர் (பாரதியார்)

**குறிப்புச்சட்டகம்:**

முன்னுரை
பிறப்பும் இளமையும்
விடுதலை வேட்கை
தேசியக் கவிஞர் பாரதியார்
முன்னறி புலவர் பாரதி
சமுதாயத் தொண்டு
முடிவுரை

**முன்னுரை:**

நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காகவும் தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் இழந்த செயல்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் தொண்டுள்ளம் படைத்தவர்கள், கவிஞர்கள் எனப்பலர் இருக்கிறார்கள், அவர்களுள் நான் விரும்பிப் போற்றும் கவிஞர் மகாகவி பாரதியார் ஆவார். அவர் கவிதைகள் மூலம் தேசியத்தை வளர்த்துத் தமிழ் மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டினார்.

**பிறப்பும் இளமையும்:**

“எட்டையபுரத்தில் இரட்டைப் பிரசவம்
ஒன்று தமிழ் இன்னொன்று பாரதி”

எனக்கவிக்கோ கூறுவதுபோல சின்னசாமி, இலக்குமி அம்மையார் ஆகியோர்க்கு 11.12.1882 அன்று பிறந்தார். பிறந்த ஊர் தூத்துக்குடி

மாவட்டத்திலுள்ள எட்டையபுரம். அவர் இளமையிலேயே ஆங்கிலக் கல்வியை அறவே வெறுத்தார். பைந்தமிழ்ப் பாவலராய்த் திகழ்ந்து “பாரதி” என்னும் பட்டம் பெற்றார். அவர், சில காலம் எட்டையபுரம் அரசவைக் கவிஞராக விளங்கினார். பின்னர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். சென்னையில் இதழாசிரியராகவும் பணிபுரிந்தார்.

**<u>விடுதலை வேட்கை:</u>**

பாரதியார் வாழ்ந்த காலம், பாரத நாடு ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டிருந்த காலம். நாடு விரைவில் விடுதலை அடையவேண்டுமென்ற துடிப்புடன் இருந்தார். தம் பாட்டுத் திறத்தால், தூங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி விடுதலைக் கனலை மூட்டினார். சாதி சமயப் பாகுபாடின்றி அனைவரையும் விடுதலை வேள்வியில் ஈடுபடச் செய்தார்.

**ஆயிரம் உண்டிங்கு சாதி எனில்**
**அந்நியர் வந்து புகலென்ன நீதி**

என வீர முழக்கமிட்டார்.

“**பாருக்குள்ளே நல்ல நாடு**
**நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்**”

என்றெல்லாம் பாடி, மக்களுக்கு நாட்டுப்பற்றையும் விடுதலை உணர்வையும் ஊட்டினார்.

**<u>தேசியக் கவிஞர் பாரதியார்:</u>**

இந்தியத் திருநாட்டின் இணையற்ற கவிஞராகப் பாரதியார் விளங்கினார். இதனால் இவர், அனைவராலும் “தேசியக் கவிஞர்” எனப் பாராட்டப் பெற்றார். “எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் இந்நாட்டு மக்கள்” எனத் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை ஊட்டினார்.

“**முப்பதுகோடி முகமுடையாள் உயிர்**
**மொய்ம்புற ஒன்றுடையாள் இவள்**
**செப்புமொழி பதினெட்டுடையாள் எனிற்**
**சிந்தனை ஒன்றுடையாள்**”

என்னும் பாடலின் மூலமாக, “முப்பதுகோடி மக்களும் இந்தியரே, அவர்கள்

பேசும் மொழி பலவாய் இருப்பினும் சிந்தனை ஒன்றே!" என்ற உயரிய தேசிய உணர்வை ஊட்டியவர் பாரதி.

<u>**முன்னறி புலவர் பாரதி:**</u>

விடுதலை அடைதற்கு முன்பாகவே, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளைத் தாம் வாழும் காலத்திலேயே பாடி மகிழ்ந்த முன்னறி புலவர் பாரதியாவார்.

**"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று"**

எனவும்,

**"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்**
**மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்"**

எனவும்,

**"காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்**
**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்"**

எனவும், பாடினார் பாரதியார்.

<u>**சமுதாயத் தொண்டு:**</u>

சாதிவேரை முளையிலேயே கிள்ளி எறிய விரும்பியவர் பாரதி. அதனால்தான், "குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" எனக் குழந்தை மனத்தில் ஆழப்பதித்தார் பாரதி.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்பதன்மூலம் பெண்கள் நலன் பேண விரும்பியவர் பாரதி.

**"தனியொருவனுக் குணவிலை யெனில்**
**சகத்தினை அழித்திடுவோம்"**
**"வாழிய செந்தமிழ், வாழ்கநற் றமிழர்"**
**"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே"**

என்று பாடிய பாடல்களே, பாரதியாரின் சமுதாயத் தொண்டுள்ளத்திற்கும், மொழிப்பற்றுக்கும் தக்க சான்றுகளாம்.

<u>**முடிவுரை:**</u>

"பாரத நாடு பாருக்கெல்லாம் திலகம்" எனப் பாடிய பைந்தமிழ்ப் பாவலன் 11.09.1921 அன்று மண்ணுலகைவிட்டு விண்ணுலகு அடைந்தார். அவர் வழி நாமும் நடந்து, நாடும் வீடும் போற்ற வாழ முயல்வோமாக!

**வி.பாக்கியலெட்சுமி,** "X-Std"
பாத்திமா பெண்கள் மேல்நிலைப்பள்ளி
ஒருங்கிணைப்பாளர் பெயர்: ஜெயந்தி கணேசன்
அலைபேசி எண்: 9095717483

*****

I am S.Thaiyal Nayagi from Mayiladuthurai. I was one of the student who got the scholarship from selvi kandaraj educational and charitable trust. As I want to convey my sincere thanks to our trust, here I am taking your precious time. I was born as a younger daughter of a poor cook and house keeping mother. I did my schoolings in a government school which is nearer to my house. The headmistress of that school said to my parents that she has good handwriting and she studies well so encourage her in studies. My parents again joined me in a government school for higher secondary classes. (N.Kittappa Municipal Higher Secondary School). In that school I got the first rank in every standards. Not only that, with the encouragement of my sister, I was eagerly participating in Oratorical, Essay and Thirukkural competitions, and got many prizes also In 10th standard State Board examination I got 487 marks out of 500. I was the district first as well as state first at that time. That has happened only by the encouragement of my teachers and parents. After that, I had received so many recognition and appreciations. But no one was ready to help for my further studies.

At that time Mr. Ganesan sir and Mrs. Jayanthi Ganesan Madam have introduced me to the Selvi Kandaraj Educational and Charitable trust. I got my first scholarship of Rs.1000/- from our trust. With that amount, I bought the note books for eleventh standard. In my 12th standard also, I got the scholarship from our trust. Before writing the Examination, I was afraid that if I could not perform well, my future will be a question mark. This time not only my parents but also our trust members encouraged me very well. That made me to get 1124 marks out of 1200. Even though my 12th std, percentage was low compared with 10th std, my cut off marks saved me. To attend the counselling I required Rs.5000/- That amount was very big to my family at that time. I

thought we are not eligible to study engineering and we may have go to arts college. But the co-ordinator Mr. Ganesan and Mrs. Jayanthi Ganesan Madam introduced me to one of the trust member Mr. Natarajan Sir. in Thirumalairayanpattinam. He gave me Rs.5000. That amount was very helpful to me to attend the counselling. I had attended the counselling with my maths teacher. By god's grace I got a seat in Tirunelveli government college. For the first year admission I required Rs.32000. I told that fees structure to my co-ordinators and the trust head officer Mr. Sundar. They said “Don't worry we will definitely help you”. Within one week one of our trust member Mr.R. Anandhan contacted me and said, “Mr. Natarajan told about you. I'll sponsor but also your entire 4 years studies”. That made me very happy. Not only for the first year for every year admission Mr. Anandhan sir and his wife Mrs. Revathi Anandhan madam sponsored me without any hesitation. Now I am an Engineering graduate. This happiness and the confidence for the future is only given by the education. Me and my parents are very grateful to our trust. Now I am working as a Branch Post Master in Koothanur Branch Post Office. I have completed my 3 years of service in this department. Eventhough this designation is not suitable for my studies, I am happy that my salary is helpful to my family. I will promote myself to a better position and I'll sponsor for a student's education in our trust. The trust is not only helpful for the students education but also helpful for the financial progress of the family. I am very thankful to all the trust members and I pray for all the trust members and their family Members.

Thank You!

**S.தையல்நாயகி**, முன்னாள் மாணவி
ஜெயந்தி கணேசன், ஒருங்கிணைப்பாளர்

You may please draw your Cheque / Demand Draft in favour of
“Selvi Kandaraj Educational & Charitable Trust” payable at Chennai and
Send it to our registered office address

**SELVI KANDARAJ EDUCATIONAL & CHARITABLE TRUST**
Plot No.86, ‘A’ Block, Thanikachalam Nagar, 3rd Main Road,
1st Cross St., Ponniammanmedu, Chennai - 600 110, India

Donation made to this Trust will be eligible for
Tax relief under section 80 (G) of the Income Tax Act, 1961
Vide letter No. DIT(E) No. 2(1235) 07-08 dated 21st February 2008
issued by the Director of Income Tax (Exemptions), Chennai

# KANCHEEPURAM









# SALEM








# ERODE









*With the Best Wishes*
*From*

## The Suguna Vilasa Sabha

**No.57/57A, Anna Salai, Chennai - 600 002.**
**Ph : 044-28527777, 28588519 / 20 /21**
**Fax : 044-28549770**

*With the Best Compliments*
*from*

## Sports and Sports

**17-A, Wallajah Road, Chennai - 600 002,**
**Ph : 044-26549104 Cell : 9444611173**

*With the Best Wishes*
*from*

## Venkatesh

**BPM Forex Pvt. Ltd**
**Spencer Plaza**
**Chennai - 600 002.**




**Founder Secretary Reports Trust Activities**